بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 8

இதழ் 12

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ஷஃபான் 30 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - அமான் 23 ★ 23 மார்ச் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا لَا تَجۡعَلۡنَا فِتۡنَۃً لِّلَّذِیۡنَ کَفَرُوۡا وَاغۡفِرۡ لَنَا رَبَّنَا ۚ اِنَّکَ اَنۡتَ الۡعَزِیۡزُ الۡحَکِیۡمُ ﴿۶﴾

**பொருள் :**

எங்கள் இறைவா! நிராகரிப்பவர்களுக்கு எங்களை ஒரு சோதனையாக ஆக்கிவிடாதிருப்பாயாக; எங்கள் இறைவா! எங்களை மன்னிப்பாயாக! நிச்சயமாக நீயே வல்லமையுள்ளவனும், நுண்ணறிவுள்ளவனுமாவாய். (அல் மும்தஹினா : 6)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## உயிருள்ள அருட்களும் உயிருள்ள அடையாளங்களும் இஸ்லாத்திற்கு மட்டுமே உரியன என்பதை நான் எனது வலிமையான அடையாளங்களால் காட்டிவிட்டேன் மேலும் மிகத் தெளிவாக காட்டிவிட்டேன்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

பாருங்கள்! மேலும் கவனமாக கேளுங்கள்! இஸ்லாம் (மார்க்கம்) மட்டுமே தன்னகத்தே அருட்களை கொண்டுள்ளது. மேலும், மனிதன் நிராசையடைவதையும், தோல்வியடைவதையும் அனுமதிப்பதில்லை. அதற்கான சான்று இதுவாகும். அதாவது நான் அதனுடைய அருள், ஜீவிதம் மற்றும் உண்மைக்கான உதாரணமாக எழுந்து நிற்கின்றேன். கிறித்துவத்தின் தொடர்பு வானத்துடன் உள்ளது என்பதை காட்டக் கூடிய எந்த கிறித்தவரும் இல்லை. அதாவது, ஈமானிய அடையாளமாக உள்ள அந்த அடையாளங்களையும், மேலும் கிறித்தவ நம்பிக்கையாளருக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள அந்த அடையாளங்களையும் காட்ட முடியாது. அந்த அடையாளங்கள் இவை ஆகும். அதாவது மலையே அப்பாலே போ என்று கூறப்பட்டால் அப்பால் போகிவிடும் என்பதாகும். தற்போது மலை என்ன மலை! தலைகீழாக இருக்கும் காலணியை யாராவது ஒரு கிறித்தவர் நேராக்கிக் காட்டட்டும். ஆனால், நான் உயிருள்ள அருட்களும் உயிருள்ள அடையாளங்களும் இஸ்லாத்திற்கு மட்டுமே உரியன என்பதை நான் எனது வலிமையான அடையாளங்களால் காட்டிவிட்டேன். மேலும் மிகத் தெளிவாக காட்டிவிட்டேன். நான் எண்ணற்ற பிரசுரங்களை வழங்கியுள்ளேன். தற்போது எனக்கு எதிராக பொய் வழக்குகளை தொடர்வதை தவிர அவர்களின் கைகளில் எதுவும் இல்லை.

இஸ்லாத்துடன் மட்டுமே அற்புதங்களும், அடையாளங்களும் உள்ளன. இஸ்லாத்திற்கு எந்த ஒளிவிளக்கின் தேவையுமில்லை. இன்னும் கூறப்போனால் இஸ்லாம் சுயமே ஒளிவிளக்காகும். மேலும் அதற்கான சான்றுகள் எவ்வளவு ஒளிமயமானது மற்றும் உறுதியானவை என்றால் அதற்கான உதாரணம் மற்ற எந்த மார்க்கத்திலும் இல்லை. சுருக்கமாக, இஸ்லாத்தின் எந்த ஒரு போதனைக்கான முன்மாதிரியும் இல்லாமல் இல்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 454 -காதியான் பதிப்பு 2018)

## எல்லா பாவங்களும் உண்மையில் இணை வைத்தலின் கிளைகளே ஆகும் மனிதன் இறைவனின் இருப்பு மற்றும் பண்புகள் மீது முழுமையான ஈமானும் நிச்சய உறுதியும் கொள்ளாததன் காரணமாகவே அவன் பாவங்களில் ஈடுபடுகின்றான்

وَاخۡفِضۡ لَہُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحۡمَۃِ وَقُلۡ رَّبِّ ارۡحَمۡہُمَا کَمَا رَبَّیٰنِیۡ صَغِیۡرًا ﴿ؕ۲۵﴾ رَبُّکُمۡ اَعۡلَمُ بِمَا فِیۡ نُفُوۡسِکُمۡ ؕ اِنۡ تَکُوۡنُوۡا صٰلِحِیۡنَ فَاِنَّہٗ کَانَ لِلۡاَوَّابِیۡنَ غَفُوۡرًا ﴿۲۶﴾

பொருள்: கருணை காட்டும் ஆர்வத்துடன் அவர்கள் முன் பணிவாக நடந்து கொள்ளுங்கள். மேலும், (அவர்களுக்குக்காக இறைவனிடம் வேண்டும் போது இவ்வாறு) கூறுவீராக. என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபோது என்னை வளர்த்தது போல், நீ அவர்களிடம் கருணை காட்டுவாயாக.

(பனீ இஸ்ராயீல் :25 -26)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் எல்லாவற்றையும் விட முதலில் ஏகத்துவத்தை நிலைநாட்டுதல் மற்றும் இணை வைத்தலிலிருந்து விலகுதல் ஆகியவற்றிற்கான கட்டளையை வழங்கியுள்ளது. உலகத்தில் அரசாங்கங்கள் கிடைக்கும்போது அத்துடன் இணை வைத்தலும் உருவாகிவிடுகின்றது. எனவே எங்கு முன்னேற்றங்களுக்கான முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளதோ அங்கு எதிர்கால அபாயங்களிலிருந்து விலகியிருப்பதற்கும் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவற்றை எடுத்துரைத்துவிட்டது. எனவேதான் ஏகத்துவத்துவத்திற்கு முதன்மை வழங்கியுள்ளது. ஏனெனில், எந்த பாவமும் இணை வைத்தல் இல்லாமல் உருவாக முடியாது. என்னைப் பொருத்த வரை எல்லாப் பாவங்களும் இணை வைத்தலின் கிளைகளே ஆகும். எல்லா பாவங்களும் உண்மையில் இணை வைத்தலின் கிளைகளே ஆகும். மனிதன் இறைவனின் இருப்பு மற்றும் பண்புகள் மீது முழுமையான ஈமானும், நிச்சய உறுதியும் கொள்ளாததன் காரணமாகவே அவன் பாவங்களில் ஈடுபடுகின்றான். ஏகத்துவத்தின் விஷயம் நன்மைகளுக்கான ஒரு விதை போன்று உள்ளது. எல்லா மார்க்கங்களும், அனைத்து ஒழுக்கங்களும் இந்த மையத்தை சுற்றியே வலம் வருகின்றன. ஏகத்துவக் கொள்கையை மேற்கொள்ளாவிட்டால் பின்னர் இயற்கைச் சட்டமும், ஷரீஅத் சட்டமும் இரண்டின் அடித்தளமும் அசைந்து விடும்.

ஏகத்துவத்தின் மீது நம்பிக்கை கொள்வதற்கு கட்டளை வழங்கிய பிறகு பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடப்பதற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் அந்த விஷயமும் இறைவனின் பக்கமே கவனமூட்டுகின்றது. அது இயற்கைச் சட்டத்தின் எப்படிப்பட்ட ஒரு வெளிப்பாடு என்றால் அது ஷரீஅத் சட்டத்தின் பக்கம் அழைத்து செல்கின்றது. ஏனெனில் அது படைக்கக் கூடிய இறைவனை பக்கம் வலியுத்திக் காட்டுகின்றது. மனிதன் தற்செயலாக பிறந்து விடவில்லை. அவனுக்கு முன்னால் வேறு ஒருவர் இருந்தார். அவருக்கு முன்னர் மற்றொருவர் இருந்தார் என்ற விஷயத்தை பெற்றோர்கள் மூலமாக அவன் பிறப்பது எடுத்துரைக்கின்றது.

சுருக்கமாக, ஒரு நீண்ட நெடிய தொடராக உள்ளது. அதன் மூலம் அல்லாஹ்வின் இருப்பிற்கான சாட்சியங்களும் கிடைக்கின்றன.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 320 - 321.

## நபிமொழி

**வயதான தாய், தந்தை இருந்தபோதும் அவர்களுக்கு சேவை செய்து சொர்க்கத்தில் நுழைய முடியாமல் போன அந்த நபர் துர்பாக்கியசாலி ஆவார்**

(394) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும், மக்களில் நான் அழகிய முறையில் நடந்து கொள்வதற்கு அதிகம் உரிமை படைத்தவர் யார்? என்று கேட்டார். அதற்கு, உமது தாய்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் யார்? என்று அவர் கேட்டார். அதற்கு, உமது தாய்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அந்த நபர் நான்காவது முறையாக அதன் பிறகு யார்? என்று கேட்டார். அப்போது, தாய்க்கு பிறகு உமது தந்தை நீர் அதிகம் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு அதிகம் உரிமை படைத்தவர் ஆவார். அதன் பிறகு, படிப்படியாக நெருங்கிய உறவினர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, பாடம்;அல்அதப்)

(395) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவரது மூக்கு மண்ணாகட்டுமாக! அவரது மூக்கு மண்ணாகட்டுமாக! என்று ( இந்த சொற்களை மூன்று முறை) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதவாவது அந்த நபர் கண்டிப்பிற்கும், துர்பாக்கியத்திற்கும் உரியவர் ஆவார்.

அந்த நபர் யார்? என்று மக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தனது வயதான தாய், தந்தை (உயிருடன்) இருந்தபோதும் அவர்களுக்கு சேவை செய்து சொர்க்கத்தில் நுழைய முடியாமல் போனவர் ஆவார்.

(ஹதீகத்துஸ் ஸாலிஹீன் - நூலாசரியர் மதிப்பிற்குரிய மலிக் ஸைஃபுர் ரஹ்மான் சாஹிப்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த மேற்கோள்களின் ஒளியில் திருக்குர்ஆனின் சிறப்புகள், மேன்மைகள் மற்றும் மகத்துவம் ஆகியவற்றைக் குறித்த அகப்பார்வை மிக்க குத்பா பேருரை

**முஸ்லிம்கள் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டு விட்டால், மேலும் திருக்குர்ஆனின் போதனைகளை புரிந்தவாறு அமல் செய்தால் பின்னர் முஸ்லிம் அல்லாதோருக்கு ஒருபோதும் இவ்வாறு திருக்குர்ஆனிற்கு அவமரியாதை செய்வதற்கு துணிவு இருக்காது**

**திருக்குர்ஆன் மட்டுமே தற்போது நேர்வழிக்கான வழிமுறை ஆகும்**

**இறைவனை மறுவுலகில் பார்க்கும் போதும் எவ்வாறு காண்போம்? என்று மக்கள் கேள்வி கேட்கின்றனர்.**

**அன்னார் (அலை) கூறுகின்றார்கள்**

**திருக்குர்ஆன் போதனைகளின் மீது அமல் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் பின்னர் நீங்கள் இவ்வுலகிலேயே இறைவனை கண்டு கொள்ளலாம்**

**திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு வழிகாட்டல் என்றால் அதன்படி செயல்படக் கூடியவர் உயர்தரமான சிறப்புகளை பெற்றுவிடுகின்றார். மேலும், இறைவனுடன் அவருக்கு ஓர் உண்மையான தொடர்பு உருவாகத் தொடங்கி விடுகின்றது**

**பௌதீக மற்றும் ஆன்மிக (நோய்களுக்கான) சிகிச்சைக்கும் திருக்குர்ஆனிலிருந்தே சரியான உதவி கிடைக்கின்றது**

**திருக்குர்ஆன் பகுத்தறிவின் வடிவிலும், விண்ணின் அடையாளங்களின் வடிவிலும் மிகவும் எளிமையான வழிமுறைகளில் இறைவனின் பக்கம் நம்மை வழிநடத்துகின்றது. அதன் போதனைகளின்படி அமல் செய்தால் அடையாளங்கள் வெளிப்படும். அதன் மூலம் இறைவனின் இருப்பை அறிந்து கொண்டு விடலாம்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 பிப்ரவரி 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **தப்லீக்** மாதம் **10ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் திருக்குர்ஆனின் மகத்துவம் மற்றும் முக்கியத்துவம் தொடர்பாக நான் எடுத்துரைத்துக் கொண்டிருந்தேன். இன்று அதன் தொடர்ச்சியாக இன்னும் சில விஷயங்களை கூறுவேன்.

பவள விழா சந்தர்ப்பத்தில் விக்டோரியா மகாராணிக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் அருட்கள் மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு தஹ்ஃபா கைஸரிய்யா எனும் நூலை எழுதியிருந்தார்கள். அதில் (இங்கிலாந்து) மகாராணிக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை வழங்கியிருந்தார்கள். மேலும், இஸ்லாமிய பிரச்சாரத்தை செய்திருந்தார்கள்.

அந்நூலில் எழுதியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் ஆழமான ஞானங்களால் நிறைந்துள்ளது. மேலும், இன்ஜீலைக் காட்டிலும் உண்மையான நன்மையை கற்றுக் கொடுப்பதற்காக ஒவ்வொரு போதனையிலும் முன்னோக்கி செல்கின்றது. குறிப்பாக, உண்மையான இறைவனின் முகத்தைக் காண்பதற்கான ஒளி விளக்கு திருக்குர்ஆனின் கைகளிலேயே உள்ளது. திருக்குர்ஆன் உலகில் இறங்காமல் இருந்திருந்தால் படைப்பினங்களை வணங்குவதற்கான எண்ணிக்கை உலகில் எந்த அளவை அடைந்திருக்கும் என்பதை இறைவனே நன்கறிவான். எனவே, பூமியில் இருந்து தொலைந்து போயிருந்த இறைவனின் ஏகத்துவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதற்காக நன்றி செலுத்த வேண்டும். (தஹ்ஃபா கைஸரிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 12, பக்கம் 282)

அந்தக் காலத்தில் இந்த அளவிற்கு துணிச்சலுடன் இந்திய மகாராணிக்கு இவ்வாறு தூதுச் செய்தியை அனுப்பியவர் யார்? இஸ்லாமிய பிரச்சாரம் செய்தவர் எவர்?

இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் மகத்துவத்தை எடுத்துரைப்பதற்கு துணிச்சலற்று இருந்த அதே மக்கள் தான் இன்று நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்தினர் திருக்குர்ஆனை அவமரியாதை செய்கின்றனர் என்று நம்மைக் குறித்து கூறுகின்றனர்.

மேலும் முஸ்லிம் அல்லாதவர்கள் அவர்களின் செயல்களை பார்த்து இஸ்லாத்தை எதிர்ப்பதில் எந்த அளவிற்கு குருடர்களாகிவிட்டனர் என்றால் அவர்களால் திருக்குர்ஆனின் மகத்துவத்தை மறுக்க முடியாமல் போனதால் மன ஆறுதலுக்காக திருக்குர்ஆனின் பிரதிகளை எரித்து தங்களது உள்ளத்தின் கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். உதாரணமாக, அப்படிப்பட்ட சம்பவங்கள் சுவீடனில் நிகழ்ந்து வருகின்றன. ஸ்கேன்டலேவியன் நாடுகளில் நடைபெற்று வருகின்றன. கடந்த நாட்களிலும் நிகழ்ந்துள்ளது.

முஸ்லிம்கள் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டு விட்டால், மேலும் திருக்குர்ஆனின் போதனைகளை புரிந்தவாறு அமல் செய்தால் பின்னர் முஸ்லிம் அல்லாதோருக்கு ஒருபோதும் இவ்வாறு திருக்குர்ஆனிற்கு அவமரியாதை செய்வதற்கு துணிவு இருக்காது. அல்லாஹ்தான் இந்த மக்களுக்கு அறிவை வழங்க வேண்டும்.

அடுத்து, திருக்குர்ஆன் மட்டுமே தற்போது நேர்வழிக்கான வழிமுறை ஆகும் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இஸ்லாம் ஒரு எப்படிப்பட்ட அருளுக்குரிய மற்றும் இறைவனைக் காட்டித் தரும் மார்க்கம் என்றால், ஒரு நபர் உண்மையான முறையில் அதனை பின்பற்றி நடந்தால் மேலும் இறைவனின் தூய வேதமான திருக்குர்ஆனில் உள்ள அந்த வழிகாட்டல்களையும், வஸிய்யத்களையும் பேணி நடந்தால் பின்னர் அவர் இவ்வுலகிலேயே இறைவனை கண்டு கொள்வார்.

இறைவனை மறுவுலகில் பார்க்கும் போதும் எவ்வாறு காண்போம்? என்று மக்கள் கேள்வி கேட்கின்றனர்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் போதனைகளின் மீது அமல் செய்யுங்கள். அவ்வாறு செய்தால் பின்னர் நீங்கள் இவ்வுலகிலேயே இறைவனை கண்டு கொள்ளலாம். உலகின் பார்வையிலிருந்து ஆயிரக்கணக்கான திரைகளுக்குள் (மறைந்து) இருக்கும் அந்த இறைவனை அடையாளம் காண்பதற்கு திருக்குர்ஆனின் போதனைகளை தவிர வேறு எந்த வழியுமே இல்லை. திருக்குர்ஆன் பகுத்தறிவின் வடிவிலும், விண்ணின் அடையாளங்களின் வடிவிலும் மிகவும் எளிமையான வழிமுறைகளில் இறைவனின் பக்கம் நம்மை வழிநடத்துகின்றது. அதன் போதனைகளின்படி அமல் செய்தால் அடையாளங்கள் வெளிப்படும். அதன் மூலம் இறைவனின் இருப்பை அறிந்து கொண்டு விடலாம். கூறினார்கள்:

அதில் (அதாவது திருக்குர்ஆனில்) ஓர் அருளும், ஈர்ப்பு சக்தியும் உள்ளது. இறைவனைத் தேடக்கூடியவர்களை ஒவ்வொரு நொடியும் இறைவனின் பக்கம்

ஈர்க்கின்றது. மேலும், ஒளியையும், நிம்மதியையும், மன அமைதியையும் நல்குகின்றது. திருக்குர்ஆன் மீது உண்மையான ஈமான் கொள்ளக் கூடியவர் தத்துவ ஞானிகளைப் போன்று இந்த நுட்பங்கள் மிக்க உலகை படைக்கக் கூடியவன் ஒருவர் இருக்க வேண்டும் என்று எண்ணம் கொள்ள மாட்டார்கள். மாறாக, சுயமே ஓர் அகப்பார்வையை பெற்று மேலும் ஒரு தூய காட்சியை கண்டு உண்மையில் அந்த படைத்த இறைவன் இருக்கின்றான் என்று நம்பிக்கையின் கண்களால் கண்டு கொண்டுவிடுகிறார். அந்த தூய வேதத்தின் ஒளியைப் பெறக் கூடியவர் வெறும் காய்ந்த பகுத்தறிவு வாதிகளைப் போன்று இறைவன் ஏகன் ஆவான். மேலும் அவன் இணையற்றவன் என்று (மட்டும்) எண்ணம் கொள்வதில்லை. மாறாக, அந்த இறைவன் நூற்றுக்கணக்கான ஒளிமயமான அடையாளங்களுடன் தன்னை கரம் பிடித்து இருளிலிருந்து வெளியேற்றுகின்றான். மேலும், உண்மையான இருப்பிலும், பண்புகளிலும் இறைவனுக்கு எவரும் இணையில்லை என்பதையும் அவர் உள்ளபடியே கண்டு கொண்டுவிடுகிறார். அது மட்டுமல்ல, மாறாக, அவர் தான் எவ்வாறு இறைவனை கருதுகின்றார் என்பதை செயல்ரீதியில் உலகத்திற்கு காண்பித்து கொடுத்துவிடுகிறார். மேலும், இறைவனின் ஏகத்துவத்தின் மகத்துவத்தும் எந்த அளவிற்கு உள்ளத்தில் உறைந்துவிடுகின்றது என்றால், **அவர் இறை நாட்டத்திற்கு முன்னால் முழு உலகத்தையும் ஒரு மரணித்தப் புழுவைப் போன்று இன்னும் கூறப்போனால் பொருளற்றதாகவும், முற்றிலும் ஒன்றுமற்றதாகவும் கருதுகின்றார்.**

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 5, ரூஹானி கஸாயீன், தொகுதி 21, பக்கம் 25-26)

அடுத்து, திருக்குர்ஆனில் அறிவார்ந்த மற்றும் செயல் ரீதியிலான நேர்வழியின் முழுமைப்படுத்துதலைக் குறித்து எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் அறிவு மற்றும் செயல் நிலைகளை முழுமைபடுத்துவதற்கான வழிகாட்டல் உள்ளது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். முழுமையான முறையில் ஞானம் அருளப்பட்டுள்ளது. அதாவது திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதம் என்றால் அதன் போதனை சரியான வழியில் (மனிதனை) வழிநடத்துகின்றது. மேலும், اِهۡدِنَا الصِّرَاطَ என்பதில் செயல் நிலையின் முழுமைத்துவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ

அதாவது முழுமையான மற்றும் நிறைவான விளைவுகள் கிடைத்துவிட வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறியுள்ளது. இது செயல் முன்னேற்றத்திற்காக அருட் கொடைகளைப் பெற்ற மக்களின் வழியில் செல்வதற்கான துஆ ஆகும்.

எந்த மக்கள் அருட்கொடைகளைப் பெற்ற நபியாகவும், ஸித்தீக் ஆகவும், ஷஹீதாகவும், ஸாலிஹ் ஆகவும் இருக்கின்றனர் என்பதை நான் கடந்த குத்பாவில் எடுத்துரைத்திருந்தேன். மேலும், அவர்களின் முன்னுதாரணங்களும் உள்ளன. மேலும், இக்காலத்திலும் அல்லாஹ்வின் அருட்களை பெறுகின்ற அதுபோன்ற நேர்வழிப் பெற்ற மக்கள் உள்ளனர்.

கூறினார்கள்: உதாரணமாக, நடப்பட்ட ஒரு செடி முழுவதுமாக வளர்ச்சியடைந்து விடாத வரை அது பூத்து கனிகளை கொடுக்க முடியாது. அதேபோன்று, எந்த போதனையில் உயர்தரமான மற்றும் முழுமையான விளைவுகள் இருப்பதில்லையோ அந்தப் போதனை மரணித்த போதனையாகும். மேலும், அதனுள் வளர்ச்சிக்கான எந்த ஆற்றலும், சக்தியும் இருக்காது. உதாரணமாக, வேதத்தின் போதனையின்படி முழுமையாக அமல் செய்வதன் மூலம் நான் நிரந்தரமான முக்தி அல்லது இரட்சிப்பை பெற்றுவிடுவேன் என்றும், புழு, பூச்சிகளாக ஆகும் நிலையில் இருந்து வெளியேறி நிரந்தர ஆனந்தத்தை பெற்றுவிடுவேன் என்றும் எவருக்கும் ஒருபோதும் நம்பிக்கை உருவாக முடியாது. எனவே அதன் போதனையினால் என்ன பயன்? ஆனால், திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு வழிகாட்டல் என்றால் அதன்படி செயல்படக் கூடியவர் உயர்தரமான சிறப்புகளை பெற்றுவிடுகின்றார். மேலும், இறைவனுடன் அவருக்கு ஓர் உண்மையான தொடர்பு உருவாகத் தொடங்கி விடுகின்றது.

எந்த அளவுக்கு என்றால், திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப செய்யப்படுகின்ற அவரது நற்செயல்கள் இருக்கின்றன. அதனை திருக்குர்ஆனில் தூய்மையான மரத்துடன் ஒப்புமை படுத்திக் கூறப்பட்டுள்ளது. அது வளர்கின்றது. பூக்கின்றது. மேலும் கனிகளை கொண்டு வருகின்றது. ஒரு சிறப்பு மிக்க வகையிலான இனிப்பும், சுவையும் அவற்றில் உருவாகி விடுகின்றது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 188-189, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பெரும், பெரும் குழப்பங்கள் பரவியிருந்த மற்றும் ஏராளமான தவறான கொள்கைகளும், செயல்களும் நடைமுறையில் இருந்து வந்த காலத்தில் திருக்குர்ஆன் என்ற ஒரு பரிசுத்தமான வேதம் இறங்கியது. அந்தக் காலத்தில் கிட்டத்தட்ட அனைத்து மக்களும் தவறான செயல்களிலும், தீய நடத்தைகளிலும் பீடிக்கப்பட்டிருந்தனர். அதனை திருக்குர்ஆனில் அல்லாஹ் சுட்டிக் காட்டியவாறு இவ்வாறு கூறுகின்றான்:

ظَهَرَ الۡفَسَادُ فِی الۡبَرِّ وَالۡبَحۡرِ

பொருள்: வேதம் வழங்கப்பட்ட அனைத்து மக்களும், வேதம் வழங்கப்படாத மற்ற மக்களும் அனைவருமே தீய கொள்கைகளைக் கொண்டிருந்தனர். மேலும், உலகில் மாபெரும் குழப்பம் நிலவி வந்தது. (அர்ரோம்: 42)

சுருக்கமாக, அதுபோன்ற காலத்தில் அனைத்து தீய கொள்கைகளையும் மறுப்பதற்காக திருக்குர்ஆன் போன்ற முழுமையான வேதத்தை நமது நேர்வழிக்காக இறைவன் அனுப்பினான். அதில் அனைத்து பொய் மார்க்கங்களுக்கான மறுப்பும் இடம்பெற்றுள்ளது.......

மேலும் குறிப்பாக, ஐவேளையும் ஒவ்வொரு தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரா ஃபாத்திஹா ஓதப்படுகின்றது. அந்த சூராவில் அனைத்து கொள்கைகளும் சைகையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ

அதாவது அனைத்துலகங்களையும் படைத்த அந்த இறைவனுக்கே அனைத்து சிறப்புகளும் உரியன.

(அல்ஃபாத்திஹா:2) الرَّحۡمٰنِ

செயல்களின் பிரதிபலன் இன்றி அவன் படைக்கக்கூடியவன் ஆவான். மேலும், அவன் எந்த அமலும் இல்லாமல் அருளக்கூடியவன் ஆவான். அவனது ரஹ்மானிய்யத் என்ற பண்பு செயலாற்றுகின்றது.

الرَّحِیۡمِ

அவன் செயல்களுக்கான கூலியை வழங்கக்கூடியவன் ஆவான். நீங்கள் செய்கின்ற செயல்களுக்கு உரிய கூலியை அவன் வழங்குகின்றான். நீங்கள் செய்கின்ற துஆக்களை அவன் ஒப்புக் கொள்கின்றான்.

مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ

அவன் தீர்ப்பு நாளின் எஜமானன் ஆவான். இவ்வுலகிலும் நற்கூலியும், தண்டனையும் கிடைக்கின்றது. மறுவுலகிலும் உள்ளது.

கூறினார்கள்: இந்த நான்கு பண்புகளிலும் ஒட்டு மொத்த உலகிலும் உள்ள பிரிவுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

(மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 31-32, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

தற்போது இதனை மனிதன் ஐவேளை தொழுகைகளில் சிந்தித்து ஓதினால் பின்னர் மாபெரும் இறை ஞானத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்து, திருக்குர்ஆன் ஓர் அற்புதம் ஆகும் என்பதை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அற்புதம் என்பதன் உண்மைத்துவம் இதுவாகும். அதாவது, எதிர் தரப்பு அதற்கு நிகரான உதாரணத்தை கொண்டு வருவதிலிருந்து தோற்றுவிடுகின்ற மற்றும் எந்த உதாரணத்தையும் எடுத்து வைக்க முடியாமல் போகின்ற அசாதாரண விஷயம் அற்புதம் என்று கூறப்படுகின்றது. அந்த விஷயம் வெளிப்படையில் மனித ஆற்றல்களின் பார்வைக்குட்பட்டதாகவே இருந்தாலும் சரியே; உதாரணமாக திருக்குர்ஆன் எனும் அற்புதம் ஆகும். அது முழு அரேபியாவின் முன்பும் எடுத்து வைக்கப்பட்டது. ஆனால், அதற்கு நிகரான உதாரணத்தை எடுத்து வைப்பதிலிருந்து அரேபியாவின் அனைத்து குடிமக்களும் தோற்றுவிட்டனர். எனவே, அற்புதத்தின் உண்மைத்துவத்தை புரிந்து கொள்வதற்காக திருக்குர்ஆன் எனும் வேதம் ஒளிமயமான உதாரணம் ஆகும். வெளிப்படையில் அதுவும் மனிதனின் கூற்றைப் போன்ற ஒரு கூற்று ஆகும். ஆனால், (திருக்குர்ஆனாகிய) அது தனது சொற்ச் செறிவு மிக்க உரையாடல்களின் அடிப்படையிலும், மிகவும் சுவையான, தூய்மையான அழகு வாய்ந்த வாக்கியங்களின் அடிப்படையிலும் எல்லா இடங்களிலும் உண்மை மற்றும் ஞானத்தை பின்பற்றச் செய்கின்றது. மேலும், முழு உலகிற்கும் எதிரான ஆதாரங்களில் தனது ஒளிமயமான சான்றுகளால் திருக்குர்ஆன் மேலாங்கி விட்டது. மேலும், வலிமையான

முன்னறிவிப்புகள் என்ற அடிப்படையில் அது எப்படிப்பட்ட தன்னிகரற்ற ஓர் அற்புதம் என்றால் 1300 ஆண்டுகள் கழிந்த பின்னரும் கூட இதுவரை அதன் எந்த ஓர் எதிரியாலும் அதனுடன் போட்டியிட முடியவில்லை. மேலும் அவ்வாறு செய்வதற்கு எவருக்கும் ஆற்றலும் இல்லை. திருக்குர்ஆனிற்கு அனைத்து உலகங்களின் வேதங்களிலிருந்தும் இந்த தனித்தன்மை இருக்கின்றது. அதாவது, உயர் தரமான சொற்செறிவாலும், பொருள் செறிவாலும் நிறைந்த மேலும் உண்மை மற்றும் ஞானத்தால் நிரம்பிய அற்புமான வாக்கியங்களில் திருக்குர்ஆன் அற்புதமான முன்னறிவிப்புகளையும் எடுத்துரைக்கின்றது.

சுருக்கமாக, அற்புதங்களின் அடிப்படையான மற்றும் முக்கியமான நோக்கம் என்னவென்றால் பொய் மற்றும் உண்மை அல்லது உண்மையாளர் மற்றும் பொய்யருக்கிடையில் ஒரு தனித்தன்மையை வெளிப்படுத்துவதாகும். அதுபோன்ற தனிச் சிறப்பு மிக்க விஷயத்திற்கு அற்புதம் அல்லது வேறு ஒரு சொல்லில் அடையாளம் என்று பெயர் ஆகும். அடையாளம் என்பது எத்தகைய அவசியமான விஷயம் என்றால் அது இல்லாமல் இறையிருப்பின் மீது முழுமையான நம்பிக்கை கொள்வதும் சாத்தியமில்லை. மேலும் முழுமையான நம்பிக்கையால் கிடைக்கக் கூடிய அந்தக் கனியையும் பெற்றுக் கொள்ள முடியாது. மார்க்கத்தின் அசல் உண்மைத்துவம் என்பது இறைவனை அடையாளம் காட்டித் தருவதுடன் தொடர்புடையதாக உள்ளது என்பது வெளிப்படையாகும்.

உண்மையான மார்க்கத்தின் அவசியமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த கூறுகளில் ஒன்றாக இந்த விஷயம் உள்ளது. அதாவது, அந்த மார்க்கத்தில் இறைவனின் இருப்பின் மீதான உறுதி மற்றும் நிச்சயத்தன்மையை வலியுறுத்தக் கூடிய அடையாளங்கள் காணப்பட வேண்டும். மேலும் அந்த மார்க்கம் தன்னை பின்பற்றுபவர்களின் கரத்தை இறைவனின் கரத்துடன் சேர்க்கக் கூடிய வலிமை வாய்ந்த ஆற்றலை தன்னுள் கொண்டிருக்கின்றது.

அல்லாஹ்வுடன் அதுபோன்ற தொடர்பை ஏற்படுத்த வேண்டும்……… வெறும் படைப்புகளை மட்டும் பார்த்துவிட்டு படைத்தவன் இருக்க வேண்டும் என்ற தேவையை மட்டும் உணர்த்தக் கூடியதாக இருப்பதும், மேலும் அந்த இறைவனின் இருப்பைப் பற்றி தகவல் கொடுக்காமல் இருப்பதும் இறைவனை முழுமையான முறையில் அடையாளம் காண்பதற்கு போதுமானதல்ல.

இந்த அளவில் மட்டுமே நிற்கக் கூடிய எவரும் எந்த உண்மையான தொடர்பையும் இறைவனுடன் ஏற்படுத்திக் கொள்ள முடியாது. மேலும், தனது நஃப்ஸின் மன இச்சைகளையும் தூய்மைபடுத்திக் கொள்ள முடியாது. இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற அளவில் மட்டும் அறிவை பெற்றுக் கொள்வதன் மூலம் உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொள்ளவும் முடியாது. அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியாது. அதிலிருந்து ஏதாவது புரிந்து கொள்ள முடியும் என்றால் அது இந்த அளவில் மட்டுமே. அதாவது, இந்த வலிமையான மற்றும் உறுதியான படைப்பை படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்று மட்டுமே அதிலிருந்து தெரிய வருமே தவிர, உள்ளபடியே அந்த படைத்தவனும் இருக்கின்றான் என்று அதிலிருந்து தெரிய வருவதில்லை.

அதாவது, பிரபஞ்சத்திலும், உலகிலும் நமக்கு என்னவெல்லாம் தென்படுகின்றனவோ அவற்றை படைத்த ஒருவன் இருக்கின்றான் என்ற அறிவும் இருக்க வேண்டும்.. அந்த இறைவன் யார்? என்றால் நாம் யாரை வணங்கி வருகின்றோமோ அவனே ஆவான். அந்த இறைவனுடன் பின்னர் உண்மையான தொடர்பும் உருவாகின்றது. பின்னர், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடப்பதன் பக்கமும் கவனம் உருவாகின்றது. பின்னர், மனிதன் தனது நஃப்ஸின் சீர்திருத்தத்தின் பக்கமும் கவனம் செலுத்துகின்றான்.

கூறினார்கள்:

எனவே தேவையை மட்டும் உணர்வது ஓர் அனுமானம் ஆகும் என்பது வெளிப்படையாகும். அது காட்சிக்கான மாற்று வழிமுறையாக இருக்க முடியாது. மேலும் காட்சியினால் கிடைக்கும் தூய விளைவுகள் அதன் மூலம் கிடைக்க முடியாது. ஒருவரை குறித்து கற்பனை செய்து கொள்வதற்கும், (நேரில்) பார்ப்பதற்குமிடையில் பெரும் வித்தியாசம் உள்ளது.

எனவே எந்த மார்க்கம் இறைவனை அடையாளம் காட்டிக் கொடுப்பதில் இறைவன் இருக்க வேண்டும் என்ற குறைபாடான நிலையில் மட்டுமே மனிதனை விட்டுவிடுகின்றதோ அந்த மார்க்கம் மனிதனின் செயல் நிலையை சீர்படுத்துவதற்கு (ஆன்மிக) உணவளிப்பதில்லை. எனவே உள்ளபடியே அப்படிப்பட்ட மார்க்கம் மரணித்த மார்க்கம் ஆகும். அந்த மார்க்கத்தின் மீது ஒரு தூய மாறுதலுக்கான எதிர்ப்பார்ப்பு வைப்பது ஒரு வீணான ஆசையாகும். வெறும் பகுத்தறிவு சான்றுகள் மட்டும் மார்க்கத்தின் உண்மைத்துவத்திற்கு முழுமையான சாட்சியமாக இருக்க முடியாது என்பது வெளிப்படையாகும். மேலும் அது ஒரு போலியான நபரால் உருவாக்க முடியாத முத்திரை ஒன்றும் அல்ல. மாறாக, பகுத்தறிவின் பொதுவான ஊற்றில் அமைந்துள்ள ஒரு தூண்டுதலின் நிலையாக கருதப்படக் கூடும். வெறும் பகுத்தறிவு சான்றுகளை மட்டும் கொடுக்க முடியும் அல்லது பகுத்தறிவால் ஒருவர் மிகப் பெரிய விஷயங்களை பேச முடியும். ஆனால், அல்லாஹ்வின் பண்புகளை மனிதன் அறிந்து கொள்ளாத வரை மேலும் அவற்றிலிருந்து பயன் பெறாத வரை அவை (அதாவது பகுத்தறிவு ரீதியிலான சான்றுகள்) மட்டுமே போதுமானது கிடையாது.

கூறினார்கள்: அடுத்து ஒரு வேதத்தில் எழுதப்பட்டுள்ள பகுத்தறிவு விஷயங்கள் உண்மையில் அவை இல்ஹாமா (அதாவது இறையறிவிப்பால் அருளப்பட்டதா)? அல்லது வேறு ஒரு வேதத்திலிருந்து திருடி எழுதப்பட்டுள்ளவையா? என்பதை யார் தீர்மானிப்பார்?

அவை திருடப்படவில்லை என்றே வைத்துக் கொண்டாலும், அந்நிலையிலும் அந்த வேதம் இறைவனின் இருப்பிற்கான உறுதியான சான்றாக எப்படி இருக்க முடியும்? இந்த பகுத்தறிவு விஷயங்கள் மட்டுமே உறுதியாக இறைவனைக் காட்டக்கூடியவை ஆகும் என்று உண்மையை தேடக் கூடிய ஒருவரின் உள்ளம் எப்போது நிம்மதி அடைய முடியும்? மேலும், அந்த விஷயங்கள் முற்றிலும் தவறுகளிலிருந்து தூய்மையானவையாகும் என்று எப்போது மன நிறைவு கொள்ள முடியும்? அதாவது, அவை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு செல்லக் கூடிய அடையாளங்கள் ஆகும் அல்லது எல்லா வகையான தவறுகளிலிருந்தும் பரிசுத்தமானவையாகும்.

எனவே ஒரு மார்க்கம் சில விஷயங்களை மட்டும் பகுத்தறிவு அல்லது தத்துவத்தின் பக்கம் சுட்டிக் காட்டி தனது உண்மையின் காரணமாக எடுத்துரைக்கின்றது. மேலும், விண்ணின் அடையாளங்கள் மட்டும் அசாதாரண நடைமுறை விஷயங்களை எடுத்துக் காட்டுவதற்கு இயலாததாக இருக்கின்றதென்றால், பின்னர் அப்படிப்பட்ட மார்க்கத்தை பின்பற்றுபவர் ஒன்று ஏமாற்றப்பட்டுள்ளார் அல்லது (மற்றவர்களை) ஏமாற்றுகின்றார். மேலும் அத்தகைய நபர் இருளிலேயே மரணிப்பார்.

சுருக்கமாக, வெறும் பகுத்தறிவு சான்றுகளால் இறையிருப்பு கூட உறுதியாக நிரூபணம் ஆக முடியாது. அப்படி இருக்க ஒரு மார்க்கத்தின் உண்மை என்பது நிரூபணம் ஆகுவது சாத்தியமற்றதாகும். ஒரு மார்க்கம் இறையிருப்பை உறுதியான முறையில் நிரூபணம் செய்து காட்டுவதற்கு பொறுப்பேற்காத வரை அந்த மார்க்கம் ஒரு பொருளற்றதாகும். அதுபோன்ற மார்க்கத்தின் மீது அன்பு கொண்ட மனிதர் துர்பாக்கியசாலி ஆவார். ஒரு வகையில் இறைவனை நேரில் பார்ப்பது போன்ற அந்தஸ்து வரை மனிதனின் இறைஞானத்தை அடையச் செய்யாத ஒவ்வொரு மார்க்கமும் தனது சாபத்தின் கறைகளை தனது நெற்றியிலேயே சுமந்து கொண்டிருக்கின்றது.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 5, ரூஹானீ கஸாயீன், தொகுதி 21, பக்கம் 59 - 61)

எனவே, இதுதான் அந்த அந்தஸ்து ஆகும். அதனை அடைவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

இறைவனை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். அடையாளங்களால் கண்டு கொள்ளுங்கள். சுய அனுபவத்தால் தொடர்பை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். வெறும் பகுத்தறிவு சான்றுகளால் (மட்டும்) அல்ல. பின்னர் அல்லாஹ்வைப் பற்றிய அந்த உண்மைத்துவம் மனிதனுக்கு திறந்து கொடுக்கப்படுகின்றது.

இறைவனின் அருளினால் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அப்படிப்பட்ட உதாரணங்கள் உள்ளன. அதாவது மார்க்கமற்றவர்களுக்கு, இன்னும் கூறப்போனால் இறைவனை ஏற்றுக் கொள்ளாத நாத்திகர்களுக்கும் இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கையூட்டப்பட்டது. பகுத்தறிவு சான்றுகள் கொடுக்கப்பட்டன. மேலும் பின்னர் அடையாளங்கள் காட்டப்பட்டபோதும், சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டபோதும் அவர்கள் மார்க்கத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். மேலும், இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டார்கள். இங்கு மேற்கத்திய நாடுகளிலும் அப்படிப்பட்ட மக்கள் உள்ளனர்.

உதாரணமாக, பெல்ஜீயம் நாட்டைச் சேர்ந்த ஒரு பெல்ஜீயன் நண்பர் இருந்தார். அவர் நாத்திகராக இருந்தார். அவர் இந்தோனேஷியன் பகுதியைச் சேர்ந்தவராக

இருந்தார். பின்னர் பெல்ஜியம் வந்துவிட்டார். மேலும் அங்கேயே குடியேறி விட்டார். அவர் பைஅத் செய்தார். நான் இறைவனின் இருப்பை ஒப்புக் கொண்டு விட்டேன். வெறும் பகுத்தறிவு சான்றுகளால் மட்டுமல்ல மாறாக, சம்பவங்களின் சான்றுகளுடனும், அடையாளங்களுடனும் ஏற்றுக் கொண்டேன். அப்போது நான் உண்மை இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதை தவிர எனக்கு வேறு வழி இருக்கவில்லை என்று என்னிடம் அவர் சுயமே கூறினார்.

அவர் கூறுகின்றார்: இந்த வழியை எனக்கு அஹ்மதிய்யத் தான் காட்டித் தந்தது. எனவே நான் அஹ்மதி முஸ்லிம் ஆகிவிட்டேன்.

அடுத்து, இது இறையச்ச-முடையவர்களுக்கு நேர்வழிகாட்டுகின்றது என்று திருக்குர்ஆன் வாதம் செய்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனங்களில் மறைந்திருக்கும் நுட்பமான இறைஞானத்தின் கருத்து இதுவாகும். அதாவது, அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

الٓمّٓ ۔ ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ فِيْهِ هُدًى لِّلْمُتَّقِيْنَ

(அல்பக்ரா: 2-3)

பொருள்: இது இறைவனின் ஞானத்தால் வெளிப்பட்டுள்ள வேதம் ஆகும். ஏனெனில், அந்த இறைவனுடைய அறிவு என்பது அறிவீனம் மற்றும் மறதிகளிலிருந்து (முற்றிலும்) தூய்மையானதாகும். அறிவீனம் மற்றும் மறதிகளிலிருந்து பரிசுத்தமானதாகும். எனவே, இந்த வேதத்தில் எவ்வித சந்தேகமும், ஐயமும் இல்லை.

இறைவனின் ஞானம் மனிதர்களின் முழுமைத்துவத்திற்காக தன்னுள் ஒரு முழுமையான ஆற்றலைக் கொண்டுள்ளது. எனவே இந்த வேதம் இறையச்சமுடையவர்களுக்கு ஒரு முழுமையான போதனையாகும். மேலும், மனித இயல்பின் முன்னேற்றங்களுக்கான உச்சபட்ச அந்தஸ்து வரை இந்த வேதம் கொண்டு சேர்க்கின்றது.

அடுத்து, அல்லாஹ் நேர்வழி காட்டக் கூடிய இறையச்சமுடையவர்கள் எவர்? என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவன் இந்த வசனங்களில் கூறுகின்றான்: இறையச்சம் கொண்ட மக்கள் யாரென்றால் அவர்கள் மறைவாக இருக்கும் இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றனர்.மேலும், தொழுகையை நிலைநாட்டுகின்றனர். மேலும், தமது செல்வங்களிலிருந்து சிலவற்றை இறைவனின் வழியில் செலவிடுகின்றனர். மேலும், திருக்குர்ஆன் மற்றும் முந்தைய வேதங்களின் மீது நம்பிக்கை கொள்கின்றனர். இந்த மக்களே நேர்வழியின் உச்சத்தில் இருக்கின்றனர். மேலும் இவர்களே இரட்சிப்பு பெறுவார்கள்.

(ஹக்கீகத்துல் வஹீ, ருஹானீ கஸாயின், தொகுதி 22, பக்கம் 136 -137)

இது இறையச்சமுடையவரின் விளக்கம் ஆகும்.

அடுத்து, மார்க்கம் என்ற ரீதியில் திருக்குர்ஆன் முழுமையான மார்க்கமாக இருப்பது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் மார்க்கத்தை முழுமைப்படுத்துவதற்கான உரிமையை செலுத்தி விட்டது. திருக்குர்ஆன் சுயமே இவ்வாறு கூறுகின்றது:

اَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ وَ رَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا
اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَ

பொருள்: இன்று நான் உங்களது மார்க்கத்தை உங்களுக்காக முழுமை செய்துவிட்டேன். மேலும், எனது அருட்கொடையை உம் மீது முழுமை செய்துவிட்டேன். மேலும், நான் இஸ்லாத்தை உங்களது மார்க்கமாக நிர்ணயித்து மகிழ்ச்சியடைந்தேன்.

எனவே, திருக்குர்ஆனிற்கு பிறகு (இனி) வேறொரு வேதத்திற்கு பாதம் வைப்பதற்கு இடமில்லை. ஏனெனில், எந்த அளவிற்கு மனிதத் தேவைகள் இருந்தனவோ அவை அனைத்தும் திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுவிட்டன. மேலும் தற்போது இறை உரையாடல்களுக்கான வாசல் மட்டுமே திறக்கவில்லை. அதுவும் தானாகவே அது திறந்துவிடவில்லை. மாறாக, மிகவும் தெளிவான இறை உதவிகளின் வடிவத்தை தன்னுள் கொண்டுள்ள உண்மையான மற்றும் பரிசுத்தமான இறை உரையாடல்கள் திருக்குர்ஆனில் இருக்கின்றன. மேலும், ஏராளமான மறைவான செய்திகளையும் அது உள்ளடக்கியுள்ளது. உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொண்ட பிறகு, திருக்குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் பின்பற்றுதலின் மூலமாக மட்டுமே அவை கிடைக்கின்றன. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 80)

வேதனை என்னவென்றால், நமது எதிரிகள் இந்த இறைஞானத்தின் விஷயங்களை கேட்க விரும்புவதில்லை. மேலும், நவூதுபில்லாஹ் நாம் திருக்குர்ஆனில் மாற்றங்களை செய்துவிட்டோம் என்று நம் மீது பழி சுமத்துகின்றனர்.

திருக்குர்ஆன் ஆன்மிக மருத்துவமாக இருப்பது பற்றி அன்னார் (அலை) தமது நூலான சஷ்மாயே மஃரிஃபத்தில் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு ஞானம் நிறைந்த நூல் என்றால், அது ஆன்மிக மருத்துவத்தின் ஒட்டுமொத்த சட்டங்களையும் அதாவது, உண்மையில் ஆன்மிக மருத்துவமாக இருக்கின்ற மார்க்கத்தின் விதிமுறைகளை பௌதீக மருத்துவத்தின் ஒட்டுமொத்த சட்டங்களுடன் ஒப்புமைப்படுத்தி அதற்கேற்ப நிர்ணயித்துள்ளது.

மேலும் இந்த ஒப்புமை எப்படிப்பட்ட நுட்பான விஷயம் என்றால், அது நூற்றுக்கணக்கான இறைஞானங்களும், உண்மைத்துவங்களும் திறப்பதற்கான வாசல் ஆகும். எவர் பௌதீக மருத்துவத்தின் ஒட்மொத்த சட்டங்களையும் கருத்தில் கொண்டவாறு திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ள சட்டங்களை பார்ப்பாரோ அவரால் மட்டுமே திருக்குர்ஆனிற்கு உண்மையான மற்றும் முழுமையான விளக்கவுரையை வழங்க முடியும்.

கூறினார்கள்: ஒருமுறை எனக்கு சில ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் சில புத்தகங்கள் ஆன்மிக காட்சியில் காட்டப்பட்டன. அல்லாஹ் சுயமே வழிகாட்டினான்.

சில மருத்துவர்களின் நூல்கள் ஆன்மிக காட்சியின் வடிவில் காட்டப்பட்டன. மேலும், பௌதீக மருத்துவத்தின் ஒட்டு மொத்த சட்டங்கள், அறிவு ரீதியிலான விதிமுறை மற்றும் ஏழு அவசியமான விஷயங்கள் போன்றவற்றை குறித்த விவாதங்கள் மற்றும் கட்டுரைகளை அவை உள்ளடக்கியிருந்தன. அந்நூல்கள் இவற்றை குறித்து இருந்தன. அவற்றில் சிறந்த மருத்துவர் குரைஷியின் நூலும் இடம் பெற்றிருந்தது.

அதாவது ஹக்கீம் குரைஷி அவர்களின் ஒரு நூலும் அவற்றில் இடம்பெற்றிருந்தது. மேலும், இவையே திருக்குர்ஆன் தஃப்ஸீர் ஆகும் என்று சைகையாக கூறப்பட்டிருந்தது.

இதிலிருந்து பௌதீக கல்விக்கும் மார்க்கக் கல்விக்குமிடையில் மிகவும் ஆழமான மற்றும் நெடிய தொடர்பு உள்ளது என்றும், மேலும் ஒன்று மற்றொன்றை உண்மைப்படுத்தக் கூடியதாக உள்ளது என்றும் தெரிய வருகின்றது. பௌதீக மருத்துவ நூல்களான இவற்றை நான் கருத்தில் கொண்டவாறு திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்த்தபோது பௌதீக மருத்துவத்தின் மிகவும் நுட்பத்திலும் நுட்பமான அந்த ஒட்டு மொத்த சட்டங்களின் விஷயங்களும் மிகவும் தெளிவான கோணத்தில் திருக்குர்ஆனில் இடம்பெற்றிருப்பதை நான் கண்டேன். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 102 -103)

அதாவது, சில பௌதீக மற்றும் ஆன்மிக (நோய்களுக்கான) சிகிச்சைக்கும் திருக்குர்ஆனிலிருந்தே சரியான உதவி கிடைக்கின்றது. அதனை சீர்தூக்கிப் பார்ப்பதற்கும், இறைஞானத்தைப் பெறுவதற்கும் காலத்தின் இமாமின் கூற்றுகளை கேட்பதற்கு அவசியம் உள்ளது. அவரது நூல்களை படிப்பதற்கு அவசியம் உள்ளது.

அடுத்து, இறைத் தொடர்பிற்கான அசல் வழிமுறை திருக்குர்ஆனே ஆகும் என்ற விஷயத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நினைவிருக்கட்டும். மனிதன் அந்த மறைவிலும் மறைவான இறைவனை ஒருபோதும் தனது வலிமையால் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. அவன் சுயமே தனது இறை அடையாளங்களால் அடையாளம் காட்டிக் கொடுக்காத வரை மனிதனால் அடையாளம் அந்த இறைவனை காண முடியாது.

மேலும், இறைவனின் மூலமாக அந்த சிறப்பான தொடர்பு உருவாகாத வரை இறைவனுடன் உண்மையான தொடர்பும் ஒருபோதும் உருவாக முடியாது. வல்லமை மிக்க இறைவன் புறமிருந்து ஓர் ஒளி உள்ளத்தில் நுழையாத வரை மன இச்சைகள் (மனிதனின்) உள்ளத்திலிருந்து ஒருபோதும் வெளியேறவும் முடியாது.

பாருங்கள்! நான் நேரில் கண்ட சாட்சியத்தை அளிக்கின்றேன். அந்த தொடர்பு திருக்குர்ஆனை பின்பற்றுவதன் மூலமே கிடைக்க முடியும். மற்ற வேதங்களில் தற்போது வாழ்விற்கான எந்த உயிரோட்டமும் இல்லை. மேலும், அந்த உண்மையான அன்பிற்குரிய இறைவனின் முகத்தைக் காட்டக் கூடிய வேதமாக ஒரேயொரு வேதம் மட்டுமே வானத்தின் கீழ் உள்ளது. அதாவது திருக்குர்ஆன் உள்ளது.

(ஹக்கீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயீன், தொகுதி 22, பக்கம் 2)

எனவே திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி அமல் செய்வதன் மூலம் இறைவனின் முகத்தை கண்டு கொள்ள முடியும்.

அஹ்மதிகளாகிய நமக்கும் இது சிந்திக்கக் கூடிய இடம் ஆகும். திருக்குர்ஆனின் போதனையின்படி அமல் செய்யக்கூடியவர்கள் நம்மில் எத்தனை நபர்கள் உள்ளனர்? ஆழ்ந்து சிந்திப்பவர்களும், ஓதுபவர்களும் எத்தனை நபர்கள் உள்ளனர்? அதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாமும், நமக்கு முன்னர் வாழ்ந்து சென்ற அந்த நல்லடியார்களும் நேரடியாக கண்ட சம்பவம் மற்றும் சொந்த அனுபவம் இதுவாகும். அதவாது, திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுதலில் எவர் களங்கமற்ற வகையிலும், உண்மையுடனும் அடி எடுத்து வைப்பாரோ அவரது உள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஈடு இணையற்ற ஏக இறைவனின் மீதான அன்பு குடி கொண்டு விடுகின்றது. இறைவேதத்தின் ஆன்மிக ஆற்றல் மனித ஆன்மாவிற்கு ஓர் ஒளியை வழங்குகின்றது. அதன் மூலமாக அவரது கண் திறக்கின்றது. இறுதியில் மறுவுலக அற்புதங்கள் அவருக்கு காண்பித்துக் கொடுக்கப்படுகின்றன. ஆக, அந்த நாள் முதல் இறைவன் இருக்கின்றான் என்ற விஷயம் அவருக்கு அனுமான அறிவு என்ற ரீதியில் தெரிய வருகின்றது. பின்னர், அந்த நம்பிக்கை அதிகரிக்கின்றது. எந்த அளவுக்கு என்றால், அனுமான அறிவு என்ற ரீதியிலிருந்து பார்வை அறிவு என்ற நிலையை அடைகின்றது. பின்னர் பார்வை அறிவு என்ற நிலையிலிருந்து அனுபவ அறிவு என்ற அந்தஸ்தை அடைகின்றது.

எந்த நபர் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்கின்றாரோ அவருக்கு முதலில் எந்த உளத் தூய்மையும் கிடைக்கப் பெறுவதில்லை. அவர் பல வகையான பாவங்களில் மூழ்கியிருக்கின்றார். பின்னர் இறைவனின் கருணை அவருக்கு உதவி செய்கின்றது. அசாதாரண வழிமுறைகளின் மூலமாக அவரது ஈமானிற்கு ஆற்றல் வழங்கப்படுகின்றது.

இதைக் குறித்து திருக்குர்ஆனில் இவ்வாறு வாக்குறுதி உள்ளது:

لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا

பொருள்: நம்பிக்கை கொண்டவர்களுக்கு அல்லாஹ்வின் புறமிருந்து நற்செய்திகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ( யூனுஸ்: 65)

அதேபோன்று அவரும் தனது இருப்பைக் குறித்து பல வகையான நற்செய்திகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார். இந்த நற்செய்திகளின் மூலமாக அவரது ஈமான் வலிமை பெற வலிமை பெற அவர் பாவங்களிலிருந்து விலகி விடுகின்றார். மேலும், நன்மையின் பக்கம் செயல்பட தொடங்குகிறார்.

(சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 423 - 424)

இஸ்லாத்தின் மேன்மைக் குறித்த ஒரு கட்டுரை ஆரிய சமாஜத்தின் மாநாட்டில் வாசித்துக் காட்டப்பட்டது. அதில் திருக்குர்ஆனின் தனிதன்மை மிக்க சிறப்புகளை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறை வேதத்தை அடையாளம் காண்பதற்காக பகுத்தறிவு வகுத்துள்ள அந்த தனித்தன்மை வாய்ந்த அடையாளம் என்பது இறைவனின் பரிசுத்தமான வேதமான திருக்குர்ஆனில் மட்டுமே காணப்படுகின்றது. அக்காலத்தில் இறைவனின் வேதத்தில் தனித்தன்மை வாய்ந்த அடையாளமாக இருந்திருக்க வேண்டிய அந்த அனைத்து சிறப்புகளும் மற்ற வேதங்களில் ஒருபோதும் இடம் பெற்றிருக்கவில்லை. அவற்றில் அந்த சிறப்புகள் முந்தைய காலத்தில் இருந்திருக்கக் கூடும். ஆனால், தற்போது இல்லை. நாம் முன்னர் எழுதியுள்ள ஒரு சான்றின் அடிப்படையில் அவற்றை இல்ஹாமிய வேதமாக நம்புகின்றோம். ஆயினும் அவை இல்ஹாமிய வேதமாக இருந்தாலும் கூட தற்போதைய நிலைமையின் அடிப்படையில் அவை முற்றிலும் பயனற்றதாகும். காலியாகவும், பாழடைந்தும் கிடக்கும் அந்த அரசக் கோட்டையைப் போன்றதாகும். செல்வம் மற்றும் படைபலம் உட்பட அனைத்தும் அங்கிருந்து இடம் பெயர்ந்து சென்றுவிட்டன.

அடுத்து, தனித்தன்மை வாய்ந்த சிறப்புகளை மேலும் எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: தற்போது மனிதர்களின் சக்திக்கு அப்பாற்பட்ட திருக்குர்ஆனின் தனித்தன்மை வாய்ந்த அந்த சிறப்புகளை கீழ் கண்டவாறு எடுத்துரைக்கின்றேன்:

கூறினார்கள்: முதலாவது என்னவென்றால், அதில் ஒரு வலிமையான ஆற்றல் உள்ளது. அது தன்னை பின்பற்றக்கூடியவர்களை அனுமான ஞானத்திலிருந்து அனுபவ ஞானம் வரை கொண்டு சேர்த்து விடுகின்றது.

வெறும் அனுமானமாக இருப்பதில்லை. மாறாக, அவரிடம் உறுதியான ஞானம் உருவாகி விடுகின்றது.

மேலும், ஒரு மனிதன் முழுமையான ரீதியில் அதனை பின்பற்றும்போது பின்னர் இறை ஆற்றலின் உதாரணம் அற்புதத்தின் வடிவில் அவருக்கு காட்டப்படுகின்றன. மேலும், இறைவன் அவருடன் பேசுகின்றான். மேலும் தனது உரையாடல் மூலமாக மறைவான விஷயங்களை குறித்து அவருக்கு அறிவிக்கின்றான். நான் திருக்குர்ஆனுடைய இந்த அருட்களை ஒரு (பழங்)கதையாக எடுத்துரைக்கவில்லை. மாறாக, எனக்கு காட்டப்பட்டுள்ள அந்த அற்புதங்களை நான் முன்வைக்கின்றேன். அந்த அனைத்து அற்புதங்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சம் இருக்கும். இன்னும் கூறப்போனால், அவை ஒரு லட்சத்தையும் விட கூடுதல் ஆகும்.

எவர் என்னுடைய இந்த வேதத்தை பின்பற்றுவாரோ, அவர் இந்த வேதத்தின் அற்புதங்கள் மீது மட்டும் ஈமான் கொள்ள மாட்டார் மாறாக, அவருக்கும் அற்புதங்கள் வழங்கப்படும் என்று இறைவன் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். எனவே மனிதர்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட மற்றும் இறைவனின் செயலாக மட்டுமே திகழ்கின்ற அந்த அற்புதங்களை இறைவனின் வேதத்தின் தாக்கங்களால் பெற்றேன்.

பூமியில் வந்த அந்த நிலநடுக்கங்களும், உலகத்தை தின்று வரும் அந்த பிளேக் நோயும் எனக்கு வழங்கப்பட்ட அந்த அற்புதங்களைச் சேர்ந்ததாகும். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 402- 403)

கூறினார்கள்: இந்த அற்புதங்கள் என்னுடையதல்ல. மாறாக, இவை திருக்குர்ஆனுடையதாகும். ஏனெனில், நாம் அதனுடைய ஆற்றலாலும், அதனால் வழங்கப்பட்ட உயிரோட்டத்தாலுமே இந்த பணியை செய்து வருகின்றோம்.

கூறுகின்றார்கள்: சுருக்கமாக, திருக்குர்ஆனுடைய வலிமை மிக்க ஆற்றல்களில் ஓர் ஆற்றல் என்னவென்றால், அதனை பின்பற்றுகின்றவர்களுக்கு அற்புதங்களும், அசாதாரண விஷயங்களும் வழங்கப்படுகின்றன. மேலும் உலகம் அதனுடன் போட்டி போட முடியாத அளவிற்கு அவை அதிகமானதாக உள்ளன.

ஆக, நான் வாதம் செய்கின்றேன். மேலும், மிக உரத்தக் குரலில் கூறுகின்றேன்.

உலகின் அனைத்து எதிரிகளும், கிழக்கில் இருந்தாலும் சரி; மேற்கில் இருந்தாலும் சரி, அனைவரும் ஒரு மைதானத்தில் ஒன்று கூடட்டும். மேலும் அடையாளங்கள் மற்றும் அசாதரண விஷயங்களில் என்னுடன் போட்டியிட விரும்பினால் பின்னர் இறைவனின் அருள் மற்றும் நற்பேறால் அவர்கள் அனைவரின் மீதும் நான் வெற்றி பெற்றுவிடுவேன். எனது ஆன்மாவில் ஏதோ ஆற்றல் இருக்கின்றது என்ற காரணத்தால் இந்த வெற்றி இருக்காது. மாறாக, தனது வேதமான திருக்குர்ஆனின் வலிமையான ஆற்றலும், அவனின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் ஆன்மிக ஆற்றல் மற்றும் உயர்ந்த அந்தஸ்திற்கு நான் ஆதாரம் கொடுக்க வேண்டும் என்று இறைவன் நாடியுள்ளான்.

இறைவன் தனது அருளினால் மட்டுமே எனக்கு இந்த நற்பேறை

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

### திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

வழங்கியுள்ளானே தவிர எனது ஒரு திறமையின் காரணமாக இந்த நற்பேறை வழங்கவில்லை. அதாவது, நான் அவனது மகத்துவம் மிக்க நபியையும் மற்றும் அவனது வலிமை மிக்க வேதத்தையும் (அதாவது திருக்குர்ஆனை) பின்பற்றுகின்றேன். மேலும், அதன் மீது அன்பு கொண்டுள்ளேன். திருக்குர்ஆன் என்ற பெயர் கொண்ட மற்றும் இறைவனின் ஆற்றல்களின் வெளிப்பாடாக உள்ள அந்த இறைவனின் வேதத்தின் மீது நான் ஈமான் கொண்டுள்ளேன். لَهُمُ الْبُشْرٰى فِي الْحَيٰوةِ الدُّنْيَا (யூனுஸ்: 65) என்பது திருக்குர்ஆனின் வாக்குறுதியாகும். மேலும், اَيَّدَهُمْ بِرُوْحٍ مِّنْهُ என்ற வாக்குறுதி உள்ளது. (அல்முஜாதிலா: 23) يَجْعَلْ لَّكُمْ فُرْقَانًا என்ற வாக்குறுதி உள்ளது. (அல்அன்ஃபால்: 30). இந்த வாக்குறுதிக்கு ஏற்ப இறைவன் அந்த அனைத்து அருட்களையும் எனக்கு வழங்கியுள்ளான்.

இந்த வசனங்களின் பொருள் இவ்வாறாகும்:

எந்த மக்கள் திருக்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்வார்களோ அவர்களுக்கு நற்செய்திக்குரிய கனவுகளும், இல்ஹாம்களும் வழங்கப்படும். அதாவது மிக அதிகமாக வழங்கப்படும். அரிதிலும் அரிதாக மற்றவர்களுக்கும் ஒரு சில உண்மையான கனவுகள் வரக் கூடும். ஆனால், ஒரு துளி தண்ணீருக்கு ஒரு நதியுடன் எந்த ஒப்புமையும் இல்லை. ஒரு பைசாவிற்கு ஒரு கருவூலத்துடன் சற்றும் ஒப்புமை கிடையாது.

பின்னர் கூறினார்கள்: முழுமையாக பின்பற்றி நடப்பவர்களுக்கு பரிசுத்த ஆவியால் உதவி செய்யப்படும். அதாவது அவர்களது புரிதல் மற்றும் அறிவிற்கு மறைவிலிருந்து ஓர் ஒளி கிடைக்கும். அவர்களின் ஆன்மிக காட்சியின் நிலைமை மிகவும் தெளிவாக்கப்படும். மேலும், அவர்களின் கூற்றிலும், பணியிலும் தாக்கங்கள் வைக்கப்படும். மேலும், அவர்களின் ஈமான் மிகவும் உறுதியாக்கப்படும்.

பின்னர் கூறினார்கள்: இறைவன் அவர்களுக்கும் அந்நியர்களுக்கும் மத்தியில் ஒரு தெளிவான வித்தியாசத்தை ஏற்படுத்திவிடுவான். அதாவது, மற்றவர்களுக்கு எதிரில் அவர்களுக்கு ஒரு நுட்பமான ஞானம் வழங்கப்படும். அவர்களுக்கு வழங்கப்படும் அற்புதங்கள் மற்றும் அசாதாரண விஷயங்களில் மற்ற அனைத்து ஆற்றல்களும் செயல் இழந்துவிடும்.

கூறினார்கள்: ஆக, நாம் பார்க்கின்றோம். தொன்றுதொட்டே இறைவனின் இந்த வாக்குறுதி முழுமையடைந்து கொண்டே வந்து கொண்டிருக்கின்றது. மேலும் இக்காலத்தில் நாம் சுயமே அதற்கு நேரடி சாட்சியமாக உள்ளோம்.

அந்தோ! முஸ்லிம்களும் கொஞ்சம் புரிந்து கொண்டிருக்க வேண்டுமே! மேலும், நமக்கும் அதன் சரியான புரிதலும் கிடைக்க வேண்டும். அதவாது இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அடையாளங்களுடன் அனுப்பப்பட்டார்கள். மேலும் அந்த அடையாளங்களின் தொடர் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மேலும், எவரெல்லாம் அல்லாஹ்வின் வேதத்தை சரியான முறையில் பின்பற்றுவாரோ அல்லாஹ் அவருக்கும் அதன் ஏதாவது இன்பத்தை சுவைக்கச் செய்து கொண்டிருப்பான்.

பின்னர் கூறினார்கள்: இவை திருக்குர்ஆன் தன்னை பின்பற்றக்கூடியவர்கள் மீது ஏற்படுத்தும் சிறந்த ஆற்றல்கள் ஆகும். அவற்றை நாம் எடுத்துரைத்துள்ளோம். ஆயினும், அது மற்ற அற்புதங்களாலும் நிறைந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவின் காடுகளில் தனியாக சுற்றிக் கொண்டிருந்தபோதும், அன்னாருடன் ஏழைகளாகவும், பலவீனமானவர்களாவும் இருந்த சில முஸ்லிம்களே இருந்தபோதும் திருக்குர்ஆன் இஸ்லாத்தின் முன்னேற்றம், மேன்மை மற்றும் வெற்றிக்கான செய்தியை வழங்கியிருந்தது. ரோமானியப் பேரரசர் ஈரானியர்களுடனான போரில் தோற்றுப் போயிருந்தார். மேலும், ஈரானியர்களின் கிஸ்ரா பேரரசர் அந்த நாட்டின் ஒரு பெரும் பகுதியை அபகரித்திருந்தார். அப்போதும் கூட ஒன்பது வருடங்களுக்குள் மீண்டும் ரோமானியப் பேரரசர் வெற்றி பெற்றுவிடுவார். மேலும், ஈரானை தோல்வியுறச் செய்வார் என்று திருக்குர்ஆன் முன்னறிவிப்பாக இந்த செய்தியை வழங்கியிருந்தது. ஆக, பின்னர் அவ்வாறே நிகழ்ந்துவிட்டது. அதேபோன்று, சந்திரன் பிளக்கும் உயர்தரமான அற்புதம் இறைவனின் கரத்தை வெளிப்படுத்துகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விரலின் சைகையால் சந்திரன் இரண்டு துண்டாகிவிடும் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. மேலும், நிராகரிப்பாளர்கள் அந்த அற்புதத்தைக் கண்டனர். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 409 - 411)

அடுத்து, திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் உண்மையில் முன்னறிவிப்புகள் ஆகும் என்ற விஷயத்தை சஷ்மாயே மஃரிஃபத் நூலிலேயே எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனில் எந்த அளவிற்கு கதைகள் உள்ளனவோ அவையும் உள்ளபடியே கதைகள் அல்ல. மாறாக, அவை முன்னறிவிப்புகள் ஆகும். அவை கதைகளின் வடிவில் எழுதப்பட்டுள்ளன. ஆம், தவ்ராத்தில் நிச்சயமாக அவை வெறும் கதைகளாகவே காணப்படுகின்றன. ஆனால், திருக்குர்ஆன் ஒவ்வொரு கதையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் இஸ்லாத்திற்கான ஒரு முன்னறிவிப்பாக ஆக்கிவிட்டது. மேலும், இந்தக் கதைகளின் முன்னறிவிப்புகளும் மிகவும் தெள்ளத் தெளிவாக முழுமையடைந்துள்ளன.

சுருக்கமாக, திருக்குர்ஆன் இறைஞானத்தின் ஒரு நதியாகும். மேலும் முன்னறிவிப்புகளின் ஒரு சமுத்திரம் ஆகும். எந்த மனிதனும் திருக்குர்ஆன் இன்றி இறைவன் மீது முழுமையாக கொள்வது சாத்தியமே இல்லை. ஏனெனில், இந்தத் தனித்தன்மை குறிப்பாக திருக்குர்ஆனிலேயே உள்ளது. அதாவது அதனை முழுமையாக பின்பற்றுவதின் மூலம் மனிதன் மற்றும் இறைவனுக்குமிடையில் இருக்கின்ற திரைகள் அனைத்தும் நீங்கிவிடுகின்றன. ஒவ்வொரு மார்க்கத்தைச் சேர்ந்தவரும் வெறும் கட்டுக்கதையாகவே இறைவனின் பெயரை நினைவு கூருகின்றார். ஆனால், திருக்குர்ஆன் அந்த உண்மையான அன்பிற்குரிய இறைவனின் முகத்தை காட்டித் தந்து விடுகின்றது. மேலும் நம்பிக்கையின் ஒளி மனிதனின் உள்ளத்தில் நுழைந்து விடுகின்றது. மேலும், முழு உலகின் மீது மறைவாக இருக்கும் அந்த இறைவன் திருக்குர்ஆன் மூலமாக மட்டுமே காட்சியளிக்கின்றான். (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 271 - 272)

நிபந்தனை என்னவென்றால், உண்மையான முறையில் திருக்குர்ஆனின் போதனையின் மீது அமல் செய்ய வேண்டும்.

பின்னர், அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒரு பகுதி கதைகள் (சம்பவங்கள்) ஆகும். மற்றொரு பகுதி கட்டளைகள் ஆகும். திருக்குர்ஆனின் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒரு விஷயம் கதைகளின் வடிவில் இருக்கும். சில கட்டளைகள் நேர்வழியின் வடிவில் இருக்கின்றன.......

எவர்கள் கதைகள் மற்றும் வழிகாட்டல்களை பிரித்தறிந்து கொள்வதில்லையோ அவர்களுக்கு பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. மேலும், அது அவர்களுக்கு திருக்குர்ஆனில் முரண்பாடுகளை நிரூபணம் செய்வதற்கு காரணியாக அமைகின்றது. மேலும், ஒருவகையில் தனது செயல் நிலையில் திருக்குர்ஆனை கைகளிலிருந்து இழந்து நிற்கின்றனர். ஏனெனில், திருக்குர்ஆன் தொடர்பாக இறைவனின் வழிகாட்டல் இவ்வாறு உள்ளது:

لَوْ كَانَ مِنْ عِنْدِ غَيْرِ اللّٰهِ لَوَجَدُوْا فِيْهِ اخْتِلَافًا كَثِيْرًا

(அந்நிஸா: 83) பொருள்: (அதாவது திருக்குர்ஆனாகிய) அது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்ததாக இருப்பின், பின்னர் நிச்சயமாக அவர்கள் அதில் பல முரண்பாடுகளை கண்டிருப்பர்.

கூறுகின்றார்கள்: முரண்பாடுகள் இல்லாமல் இருப்பது அல்லாஹ்வின் புறமிருந்து இறங்கியதற்கான சான்றாக கூறப்பட்டுள்ளது. ஏனெனில் இதில் முரண்பாடுகள் இல்லை. எனவே இது அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ளது. ஆனால், தொலைநோக்கு பார்வையற்ற இந்த மக்கள் கதைகள் மற்றும் வழிகாட்டல்களை பிரித்தறியாததன் காரணமாக முரண்பாடுகளை உருவாக்கி அதனை அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்ததாக குறிப்பிடுகின்றனர். அவர்களின் அறிவின் மீது பரிதாபம்!

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 83, 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஏற்கனவே கூறப்பட்டது போன்று கதைகள் முன்னறிவிப்புகளின் வடிவத்தைக் கொண்டுள்ளன. மேலும் மற்ற கட்டளைகளும் உள்ளன. அவற்றை இணைத்து சில மக்கள் புரிய விரும்புகின்றனர் என்றால், அவர்கள் தவறான புரிதலில் சிக்கிக் கொள்கின்றனர். அவர்களுக்கு அவற்றை சுயமே புரிந்து கொள்வதற்கான ஞானம் கிடையாது. அவற்றிற்கு தஃப்ஸீர் செய்யும்போது அதில் மாற்றம் செய்து விட்டதாக நம் மீது பழிசுமத்துகின்றனர்.

திருக்குர்ஆனின் உயர்தரமான சிறப்புகளை குறிப்பிட்டவாறு அன்னார்

(அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனின் உயர்தரமான சிறப்புகளில் ஒன்று அதன் போதனையும் ஆகும். ஏனெனில், அது மனித இயல்பு மற்றும் மனித நலனுக்கு முற்றிலும் பொருத்தமானதாக உள்ளது. உதாரணமாக, பல்லுக்கு பதில் பல், கண்ணுக்கு பதில் கண் என்பது தவ்ராத்தின் போதனையாகும். இன்ஜீல் இவ்வாறு கூறுகின்றது: அதாவது தீமையை ஒருபோதும் எதிர்க்காதீர்கள். மாறாக, ஒருவர் உமது வலது கன்னத்தில் அறைந்தால் நீ உமது இடது கன்னத்தை காட்டு. ஆனால், திருக்குர்ஆன்

جَزَآءُ سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا فَمَنْ عَفَا وَأَصْلَحَ فَأَجْرُهُ عَلَى اللّٰهِ

என்று கூறுகிறது.

பொருள்: ஒரு தீங்கிற்குரிய கூலி அதேயளவு தீங்கேயாகும். ஆனால், எவர் மன்னித்து சீர்திருத்துகிறாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடமுள்ளது. நிச்சயமாக, அவன் அநீதி இழைப்பவர்களை நேசிப்பதில்லை.

(அஷ்ஷூரா: 41)

குற்றம் செய்தவர் மன்னிப்பதனால் அவர் எதிர்காலத்தில் தனது தீமைகளிலிருந்து விலகி சீர்திருந்திவிடுவார் என்றால் அவரை பழிவாங்குவதை விட மன்னித்து விடுவது சிறந்ததாகும். இல்லையென்றால் தண்டனை கொடுப்பது சிறந்ததாகும். ஏனெனில், பலதரப்பட்ட இயல்புகள் உள்ளன. சில இயல்புகள் பாவத்தை மன்னித்து விட்டால் பின்னர் அந்த பாவத்தை மீண்டும் செய்வது கிடையாது. மேலும் அதிலிருந்து விலகி விடுகின்றனர். ஆனால், சில இயல்புகள் இப்படியும் இருக்கின்றன. அதாவது, சிறையிலிருந்து விடுபட்ட பிறகும் கூட மீண்டும் அதே பாவத்தை செய்கின்றன. எனவே, மனிதர்களின் இயல்புகள் பலதரப்பட்டவையாக இருக்கின்றன. எனவே அவற்றிற்கு பொருத்தமான போதனை திருக்குர்ஆன் முன்வைத்துள்ளதே ஆகும். இன்ஜீல் மற்றும் தவ்ராத்தின் போதனைகள் ஒருபோதும் முழுமையானவை கிடையாது. இன்னும் கூறப்போனால், அந்த போதனை மனித(ன் எனும்) மரத்தின் கிளைகளிலிருந்து ஒரு கிளையுடன் மட்டுமே தொடர்புடையதாக இருக்கின்றன. மேலும் அந்த இரண்டு போதனைகளும், குறிப்பிட்ட சமுதாயம் மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கான சட்டத்துடன் ஒப்புமை கொண்டுள்ளன. ஆனால் திருக்குர்ஆன் போதனை அனைத்து மனித இயல்புகளையும் கருத்தில் கொண்டதாக உள்ளது.

இந்த உதாரணத்தை நான் கடந்த ஜுமுஆவிலும் எடுத்துரைத்திருந்தேன். ஆனால், அதனை வேறொரு கோணத்தில் எடுத்துரைத்திருந்தேன். தற்போது திருக்குர்ஆனின் பண்புகளின் அடிப்படையில் இந்த உதாரணம் முன் வைக்கப்படுகிறது.

பின்னர் கூறினார்கள்: இன்ஜீலின் கட்டளை உள்ளது. அந்த அடிப்படையில் மற்றோர் உதாரணம் வழங்கப்படுகிறது. இந்த உதாரணம் மட்டும் இல்லை. இன்னும் பல உதாரணங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, நீ அந்நியப் பெண்ணை ஆபாச பார்வையுடன் பார்க்காதே என்பது இன்ஜீலின் கட்டளையாகும்.

ஆனால், நீ ஒருபோதும் பார்க்கக் கூடாது. அந்நியப் பெண்களை பார்க்கக் கூடாது. தீய பார்வையுடனும் பார்க்க வேண்டாம். நல்ல பார்வையுடனும் பார்க்க வேண்டாம். ஏனெனில், சில சமயம் அது உமது தடுமாற்றத்திற்கு காரணமாக அமையக் கூடும் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. நாங்கள் மிகவும் நல்ல பார்வையுடன் பார்க்கின்றோம். என்று சிலர் கூறிவிடுகின்றனர். நல்ல பார்வையுடனும் நீங்கள் அந்நியப் பெண்களை பார்க்க வேண்டாம் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. ஏனெனில் அது உமது தடுமாற்றத்திற்கு காரணியாக அமையும். இன்னும் கூறப்போனால் அவசியமான சந்தர்ப்பங்களில் கண்களை தாழ்த்திக் கொண்டு செயல்பட வேண்டும். அதாவது கண்களை விரித்துக் கொண்டு பார்க்கக் கூடாது. அதாவது ஏதாவது ஒரு தேவை ஏற்பட்டாலும் கூட கண்களை தாழ்த்திக் கொண்டு பார்க்க வேண்டுமே தவிர முழுமையாக கண்களை விரித்துக் கொண்டு பார்க்கக் கூடாது.

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்:

நீங்கள் உங்கள் மனைவிமார்களுக்கு அவர்கள் விபச்சாரம் செய்தாலே தவிர ஒருபோதும் மணவிலக்கு கொடுக்காதீர்கள் என்று இன்ஜீல் கூறுகின்றது. ஆனால், மணவிலக்கு கொடுப்பதை வெறும் விபச்சாரத்துடன் மட்டும் தொடர்புடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டாம். மாறாக, கணவன் மற்றும் மனைவிக்கிடையில் பரஸ்பரம் பகைமை உருவாகிவிட்டால் மேலும் பொருத்தம் நிலை பெறவில்லையென்றால் உதாரணமாக உயிருக்கு ஆபத்து இருக்குமென்றால் ஒருவேளை மனைவி விபச்சாரம் செய்யவில்லையென்றாலும் தீய நடத்தைக்கான சூழல் அவரிடமிருந்து வெளிப்பட்டுவிட்டதென்றால், அந்நிய ஆண்களை சந்திக்கின்றார் என்றால் அந்த அனைத்து சூழ்நிலைகளிலும் கணவரின் இந்த கருத்தை அடிப்படையாக வைத்து கூறப்பட்டுள்ளது. அதாவது அவர் உகந்ததாக கருதினால் விட்டுவிடலாம். (மண விலக்கு கொடுப்பதிலிருந்து விலகிக் கொள்ளலாம்).ஆயினும் அதன் பிறகும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மிகவும் கடுமையான வலியுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது அவர் மிக எளிதாக தலாக் கொடுத்து விடக் கூடாது.

கூறினார்கள்: ஆயினும் அதன் பிறகும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மிகவும் கடுமையான வலியுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தலாக் கொடுப்பதில் அவசரம் காட்டக் கூடாது. ஆண்களுக்கு தலாக் கொடுப்பதற்கு முழு அதிகாரம் இருக்கின்றது என்ற விஷயத்திற்கும் இங்கு பதில் கிடைத்துவிட்டது. சில ஆண்களின் எண்ணம் அப்படி இருக்கின்றது. அவர்கள் அதனை (சாதாரணமாக) பயன்படுத்தி விடுகின்றனர்.மேலும் அநீதியும் இழைத்து விடுகின்றனர்.

கூறினார்கள்: பொதுவாக அது ஆகுமானதல்ல. ஆயினும் ஒருவர் ஆகுமான காரணமின்றி அவ்வாறு செய்யக் கூடாது. தலாக் கொடுக்காமல் இருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பின்னர் கூறினார்கள்: திருக்குர்ஆனின் போதனை மனிதனின் தேவைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது என்பது தற்போது வெளிப்படையாகும். அதனை கைவிட்டு விடுவதனால் ஒருநேரம் இல்லாவிட்டாலும் ஒருநேரம் ஏதாவது சீர்கேடு நிச்சயம் ஏற்பட்டு விடுகின்றது. அதன் காரணமாக சில ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு மணவிலக்கு உரிமைக்கான சட்டத்தை நிறைவேற்ற நேரிட்டுள்ளது. (சஷ்மாயே மஃரிஃபத், ரூஹானீ கஸாயீன், தொகுதி 23, பக்கம் 413- 414)

தற்போது சட்டத்திலும் ஆகுமான காரணம் என்ன? என்று எழுதப்படுகின்றது. என்ன காரணம்? ஏன் தலாக் கொடுக்கப்படுகிறது? ஏன் பிரிகின்றீர்கள்? என்று அதிகமான வழக்குகளில் அவர்கள் கேட்கின்றனர். அனைத்து ஆதாரங்களும் கொடுக்க நேரிடுகின்றது.

எனவே எவ்வாறு இருப்பினும் அன்னார் (அலை) கூறினார்கள்: இது (அதாவது, தலாக்) எளிதாக நடைபெறுவதில்லை.

எனவே அவர்களுக்கும் தங்களுக்கான சட்டத்தை இயற்ற நேரிட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் உலக சட்டங்கள் இயற்றவும் படுகின்றன. பின்னர் நீக்கவும் படுகின்றன. அவற்றில் மேலும் சிறப்பை உருவாக்குவதற்கு இந்த மக்கள் முயற்சி செய்து கொண்டு வருகின்றனர். அவ்வாறு இருந்தும் ஏதாவது ஒரு குறை இருந்து விடுகின்றது. ஆனால், இறைவனின் சட்டம் எப்படிப்பட்டதென்றால் அது முற்றிலும் மனித இயல்பிற்கு பொருத்தமானதாக உள்ளது.

இங்கு நான் மீண்டும் இதனை தெளிவுபடுத்திவிடுகின்றேன். அதாவது ஆண்களுக்கு மட்டும் மணவிலக்கிற்கான உரிமை இல்லை. மாறாக, பெண்ணும் விருப்பம் இல்லாமை அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்தால் குலா எனும் மணவிலக்கை பெற்றுக் கொள்ள முடியும். ஒருவேளை ஆண் குற்றவாளியாக இருந்தால் மேலும் சில அநீதிகளை இழைத்திருந்தால் அவை நிரூபணம் ஆகிவிட்டால் பின்னர் ஹகே மஹர் எனும் மணப்பெண்ணிற்கான உரிமைத் தொகையையும் ஆணிற்கு செலுத்த நேரிடும். குலா என்ற நிலையில் அதனை செலுத்த தேவையில்லை என்பது ஆண்களின் எண்ணமாக உள்ளது. (ஆனால் ஆணின் குற்றம் நிரூபணம் ஆகிவிட்டால் குலாவின் நிலையிலும் அவருக்கு அதனை செலுத்த நேரிடும்.) மேலும் மற்ற உரிமைகளையும் செலுத்த நேரிடும். எனவே எந்த ஓர் ஆண் அல்லது பெண்ணின் எண்ணத்தில் வெறும் ஆணிற்கு மட்டுமே (மண விலக்கிற்கான) அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் தோன்ற வேண்டாம். பெண்கள் தொடர்பாக கூறப்படும்போது அங்கு இதன் விளக்கம் எடுத்துரைக்கப்பட்டு விடும்.

எவ்வாறு இருப்பினும், இந்தக் கருத்து தொடர்கின்றது. இந்த தலைப்பு தொடர்பாக இன்னும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்கள் உள்ளன. அவற்றை அவ்வப்போது எடுத்துரைத்து வருவேன். அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனின் சரியான போதனையின்படி அமல் செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக.

தமிழாக்கம் :
மவ்லவி. A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**முஸ்லிஹ் மவ்வூத் தினத்தையொட்டி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுசார் சாதனைகளின் அழகிய குறிப்புகள் மற்றும் ஹுஸூர் (ரலி) அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்கம், தஃப்ஸீருல் குர்ஆன் மற்றும் சில சொற்பொழிவுகளைக் குறித்த அந்நியர்களின் கருத்துகள்**

**வல்லமை, கருணை, இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அருளப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழுங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்குக் கிடைக்கிறது.**

**வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தி உண்டாவதாக**

**உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான, தூய ஒரு மகன் உமக்கு வழுங்கப்படுவார். ஒரு தூய மகன் உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததியாக, வழித் தோன்றலாக இருப்பார்**

**இந்த மகன் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அக மற்றும் புற ஞானங்களால் நிரம்பியிருத்தல், புத்திக்கூர்மை உள்ளவராகவும் நுண்ணிய அறிவுடையவராகவும் இருத்தல் மற்றும் பிற சிறப்புப் பண்புகளை உடையவராக இருத்தல் ஆகிய விஷயங்களை அவரது மக்களும் அந்நியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்**

**முற்றிலும் ஒரு புதிய கோணத்தில் திருக்குர்ஆனைப் படிப்பதற்கான சிந்தனையை தாங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்பதில் ஐயமில்லை. இந்த விளக்கவுரை தனது வகையைப் பொருத்தவரை முற்றிலும் முதல் விளக்கவுரையாகும். இதில் அறிவையும் நூல்களின் சான்றையும் மிக அழகிய முறையில் ஒன்றுபடுத்தியுள்ளீர்கள். தங்களது அறிவியல் புலமையும், விசாலமான பார்வையும், தங்களது அசாதாரண சிந்தனையும் நுண்ணறிவும் தாங்கள் சான்றளிக்கும் அழகும் அதன் ஒவ்வொரு சொல்லிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிகிறது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 பிப்ரவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **தப்லீக்** மாதம் **17ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பிப்ரவரி 20 ஆம் தேதி ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு தொடர்பாக நினைவு கூரப்படுகிறது என்பதை ஒவ்வோர் அஹ்மதியும் அறிவார். இதையொட்டி ஜமாஅத்களில் கூட்டங்களும் நடைபெறுவதுண்டு. இம்முறை மூன்று நாட்களுக்குப் பிறகுதான் பிப்ரவரி 20 ஆம் தேதி வரவிருக்கிறது. ஆயினும், இன்றைய குத்பாவில் இது சம்பந்தமாக சில விஷயங்களைக் கூறுவதை நான் பொருத்தமானதாகக் கருதினேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒரு மகன் பிறப்பார்; அவர் பல சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருப்பார்; அல்லாஹ்வின் சிறப்பான உதவியும் ஆதரவும் அவருக்குக் கிடைக்கும் என்பது தொடர்பாக இந்த முன்னறிவிப்பு இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த விஷயத்தை இந்த முன்னறிவிப்பை இவ்வாறு எடுத்துக் கூறினார்கள்:

முதல் முன்னறிவிப்பு இதுவாகும். மேன்மையும், கம்பீரமும் மிக்க எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இல்ஹாம் மற்றும் அவனது அறிவிப்பால் கருணையாளனும், பரிவுள்ளவனும் ஒவ்வொரு விஷயத்திற்கும் பேராற்றல் படைத்தவனுமான இறைவன் அவனது மேன்மை மிக உயர்ந்தது. அவனது பெயர் கண்ணியத்திற்குரியது - தனது இறையறிவிப்பில் என்னைப் பார்த்துக் கூறினான்:

நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்குத் தருகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். என் கருணையால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். (லூதியானா, ஹோஷியார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட) உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கிவிட்டேன். எனவே ஆற்றல், கருணை, இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அருளப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழுங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்குக் கிடைக்கிறது.

வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தி உண்டாவதாக. வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் அமுங்கிக் கிடப்பவர்கள் வெளியில் வருவதற்காகவும், இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு அல்லாஹ்வின் மறையின் அந்தஸ்து மக்களுக்கு வெளிப்படுவதற்காகவும் உண்மை தனது எல்லா அருட்களுடனும் வந்துவிடுவதற்காகவும், பொய் தனது அனைத்துத் தீய சகுனங்களுடனும் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

நான் ஆற்றல் மிக்கவன்; விரும்புவதை செய்கிறேன் என்பதை மக்கள் புரிந்து கொள்வதற்காக நான் உம்முடன் இருக்கின்றேன் என அவர்கள் உறுதி கொள்வதற்காக எவர்கள் இறையிருப்பின் மீது நம்பிக்கை கொள்வதில்லையோ இறைவனையும் இறைவனின் மார்க்கத்தையும் அவனது நேசத்தையும் அவனது தூய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் எனும் பார்வையுடனும் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற்காக குற்றவாளிகளின் வழியை வெளிப்படுத்துவதற்காக இறைவன் இதைக் கூறியுள்ளான்.

எனவே, உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான, தூய ஒரு மகன் உமக்கு வழுங்கப்படுவார். ஒரு தூய மகன் உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததியாக, வழித் தோன்றலாக இருப்பார். அழகிய, தூய மகன் உமது விருந்தினராக வருகிறார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் என்பதுமாகும். அவருக்கு பரிசுத்த ஆவி வழுங்கப்பட்டிருக்கிறது. அவர் அசுத்தத்திலிருந்து தூயவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவராக இருக்கிறார். அவருடன் அருள் உள்ளது. அது அவர் வரும்போது உடன் வரும்.

அவர் கண்ணியத்திற்குரியவராகவும், மகத்துவம் மிக்கவராகவும், செல்வம் உடையவராகவும் இருப்பார். அவர் உலகில் வருவார். தமது மஸீஹின் ஆவியினாலும், உண்மையின் ஆவியின் அருளினாலும் அதிகமானோரை நோயிலிருந்து தூய்மைப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில், இறைவனின் கருணையும், தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பியுள்ளது.

அவர் மிகவும் புத்திக்கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். உள்ளத்தால் சகிப்புத் தன்மை கொண்டவராகவும் இருப்பார். அவர் அக மற்றும் புற ஞானங்களால் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார்.

திங்கட்கிழமை, வாழ்த்துக்குரிய திங்கட்கிழமை.

மூன்றை நான்காக்குபவராக இருப்பார் என்பதைப் பற்றி இதன் பொருள் புரியவில்லை என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியுள்ளார்கள்.

எவ்வாறு இருப்பினும், மேற்கொண்டு வருகின்றது.

திங்கட்கிழமை வாழ்த்துக்குரிய திங்கட்கிழமை அவர் உயர்ந்த தகுதியிலுள்ள

மிகவும் கண்ணியத்திற்குரிய புதல்வர் ஆவார்.

مَظْهَرُ الْاَوَّلِ وَ الْاٰخر

அவர் ஆரம்பமும், முடிவின் தோற்றமாகவும் இருக்கின்றார்.

مَظْهَرُ الْحَقِّ وَالْعَلَاءِ

உண்மை மற்றும் உயர்வின் தோற்றமாகவும் இருக்கிறார்.

كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَاءِ

அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்றிருக்கும். அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாகவும் இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமையும்.

இறைவன் தன் திருப்தி எனும் நறுமணத்தால் மணம் கமழச் செய்த அந்த பிரகாசமான ஒளி வருகிறது. நாம் அவரிடத்தில் நமது ஆவியை ஊதுவோம். இறைவனின் நிழல் அவர் தலை மீது இருக்கும். அவர் மிக விரைவில் முன்னேறுவார். கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாகத் திகழ்வார். பூமியின் எல்லைகள் வரை புகழ் பெறுவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருட்களைப் பெற்றுக் கொள்ளும். அப்போது அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَكَانَ اَمْرًا مَّقْضِيًّا

இது தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும்.

ஆக, இந்த முன்னறிவிப்புக்கு ஏற்ப அன்னார் எடுத்துக் கூறியிருந்த அந்தக் காலகட்டத்திற்குள் அந்த மகன் பிறந்தார்கள். அன்னாரது பெயர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) என்பதாகும்.

அன்னாரை அல்லாஹ் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் என்ற அந்தஸ்த்திலும் அமர வைத்தான். பிறகு, ஒரு நீண்ட காலம் கழிந்ததும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து தகவல் பெற்று அறிவிப்பு செய்தார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த மகனைப் பற்றி அவர் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இருப்பார் என்று முன்னறிவிப்பு செய்திருந்தார்களோ அது நானே ஆவேன்.

இந்த மகன் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அக மற்றும் புற ஞானங்களால் நிரம்பியிருத்தல், புத்திக்கூர்மை உள்ளவராகவும் நுண்ணிய அறிவுடையவராகவும் இருத்தல் மற்றும் பிற சிறப்புப் பண்புகளை உடையவராக இருத்தல் ஆகிய விஷயங்களை அவரது மக்களும் அந்நியர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்; நன்றாக அறிவார்கள். மேலும், அந்நியர்கள் இதை பகிரங்கமாக பறைசாற்றியுள்ளார்கள். இப்போது நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அறிவுசார் மற்றும் பல்வேறு சிறப்புப் பணிகளிலிருந்து சிலவற்றைப் பற்றிக் கூறுவேன்.

நான் முன்வைக்கப் போகும் இந்த விஷயங்களைக் கேட்பதற்கு முன், கண் முன் நிறுத்த வேண்டிய விஷயம் என்னவென்றால் உடல் ஆரோக்கியத்தைப் பொருத்த வரை அன்னாரது குழந்தைப் பருவம் மிகவும் பலவீனமாக கழிந்தது; நோயில் கழிந்தது. கண்களின் பார்வையும் குறைந்து கொண்டிருந்தது. பிறகு, உலகக் கல்வியின் அடிப்படையிலும் அன்னாரது கல்வி இல்லாததற்குச் சமமாக இருந்தது. சிரமப்பட்டு நான் ஆரம்பக் கல்வி வரை கற்றேன் என்று அன்னார் தாமே கூறியுள்ளார்கள்.

ஆனால், அன்னாரை மார்க்க மற்றும் உலகக் கல்வியால் நிரப்புவதாக அல்லாஹ்வின் வாக்குறுதி இருந்தது. எனவே, எப்படிப்பட்ட அருமையான, அறிவைத் திகைப்படையச் செய்யும் சொற்பொழிவுகளையும், குத்பாக்களையும் அல்லாஹ் அன்னாரை வழங்க வைத்தான் என்றால் மேலும், எத்தகைய கட்டுரைகளை அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள் என்றால், அவற்றிற்கு நிகர் அவையே! அந்நியர்களும் இதனை ஒப்புக் கொள்கிறார்கள்.

இன்று நான் சில சான்றுகளை முன்வைப்பேன். நான் இந்த சான்றுகளை முன் வைப்பதற்கு முன்னால், அன்னாரது நூல்கள், சொற்பொழிவுகள், கட்டுரைகள் மற்றும் இறைஞானமிக்க சபைகள் ஆகியவற்றின் எண்ணிக்கை மற்றும் அளவு குறித்த ஓர் ஆய்வை முன் வைக்கிறேன். நூல்கள் உரைகள், சொற்பொழிவுகள், கட்டுரைகள் மற்றும் தூதுச் செய்திகள் ஆகியவற்றின் வடிவில் வெளியான அல்லது இப்போது ஏறக்குறைய முழுமையாகி வெளியாகத் தயாராக இருக்கின்ற அன்வாருல் உலூம் (ஞானங்களின் ஒளிகள்) என்ற வடிவில் உள்ளது. வெளியாக உள்ள அவற்றின் எண்ணிக்கையைச் சேர்த்தால் மொத்தம் 38 தொகுதிகள் ஆகிவிடும். வெளியாக உள்ள **அவற்றின் பக்கங்களின் எண்ணிக்கை 1424 ஆகும். ஆக, அவற்றின் மொத்த பக்கங்கள் 20,340 ஆகும். ஏறத்தாழ அவ்வளவு ஆகிவிடும். தஃப்ஸீரே கபீர், தஃப்ஸீரே ஸகீர் உட்பட இதர விரிவுரைகளின் உள்ளடக்கங்களின் பக்கங்கள் 28,735 ஆகும். 1808 ஜுமுஆ குத்பாக்கள் உள்ளன. அவற்றின் பக்கங்கள் 18,705 ஆகும். 51 நோன்புப் பெருநாள் குத்பாக்கள் உள்ளன. அவற்றின் பக்கங்கள் 503 ஆகும். 42 ஹஜ்ஜுப் பெருநாள் குத்பாக்கள் உள்ளன. அவற்றின் பக்கங்கள் 405 ஆகும். 150 நிக்காஹ் குத்பாக்கள் ஆகும். அவற்றின் பக்கங்கள் 684 ஆகும். ஷூ ரா சொற்பொழிவுகள் தொகுதி 1 மற்றும் தொகுதி 3-ம் வெளியாகியுள்ளது. அவற்றின் பக்கங்கள் 2131 ஆகும்.** பல்வேறு வகையான இவையனைத்தும் உள்ளன, இன்னும் பலவும் உள்ளன. அந்தப் பக்கங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டினால் ஒன்று சேர்த்தால் ஏறத்தாழ 75,000 பக்கங்கள் ஆகின்றன. Research Cell அல்ஹகம் மற்றும் அல்ஃபஸ்ல் பத்திரிகைகளின் 1913 முதல் 1970 வரையிலான இதழ்களைப் பார்த்தார்கள்.

அவர்கள் கூறுகின்றனர்:

மேற்கொண்டு சில உள்ளடக்கங்கள் முன் வந்துள்ளன. அவை இதுவரை அன்வாருல் உலூமில் அல்லது வேறு நூலில் வெளியாக முடியவில்லை. அதன் விவரத்தின்படி 55 கட்டுரைகள், 27 சொற்பொழிவுகள் 143 மஜாலிஸே இர்ஃபான், இறைஞானம் மிக்க சபைகள், 222 தலைப்பில் பொன் மொழிகள் 131 கடிதங்கள் இதுவரை கிடைத்துள்ளன. அவை மிகவும் விசாலமான ஓர் அறிவுக் களஞ்சியம் ஆகும்.

இப்போது நான் முதலில் அன்னாரது அறிவுசார் அரும் பணிகளில் இருந்து திருக்குர்ஆனின் மொழியாக்கங்கள் மற்றும் விரிவுரைகளின் சில தரவுகள் மற்றும் அந்நியர்கள் இது குறித்து கூறிய கருத்துகளை முன் வைக்கின்றேன்:

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஃப்ஸீரே கபீரில் 59 சூராக்களுக்கு விளக்கவுரையை எடுத்துரைத்துள்ளார்கள். அது 10 தொகுதிகளிலும் 5907 பக்கங்களிலும் உள்ளடங்கியுள்ளது. இது மட்டுமின்றி அன்னாரது பல திருக்குர்ஆன் விளக்கவுரைக் குறிப்புகள் கிடைத்துள்ளன. அவற்றின் பக்கங்களின் எண்ணிக்கையும் ஆயிரங்களில் உள்ளது. ஒரு காலத்தில் அதுவும் வெளியிடப்படும். திருக்குர்ஆனின் சொற்றொடர் மொழியாக்கம் என்ற அன்னாரின் ஒரு மாபெரும் பணி தஃப்ஸீரே ஸகீர் வடிவில் உள்ளது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்குத் தமது வாழ்வின் கடைசி காலகட்டத்தில் தமது வாழ்வில் தம் மூலமாக முழுத் திருக்குர்ஆனிற்கும் தரமான, உருது சொற்றொடர் மொழியாக்கம் ஒன்று சுருக்கமாகவும் அதே நேரம் தொகுப்பாகவும் குறிப்புகளுடன் வெளியாகி விட வேண்டும் என்ற மிகப் பெரும் விருப்பம் இருந்தது.

1955-இன் ஐரோப்பிய பயணத்திலிருந்து திரும்பி வந்த பிறகு பெரும்பாலும் ஹுஸூர் (ரலி) அவர்களின் உடல்நலமும் மோசமாக இருந்து வந்தது தான்; இருப்பினும் அல்லாஹ் தமது வாக்களிக்கப்பட்ட கலீஃபாவுக்குப் பரிசுத்த ஆவியால் எத்தகைய சிறப்பான உதவி புரிந்தான் என்றால், அன்னார் ஜூன் மாதத்தில் 1956-ல் கோடையில் முர்ரேவின் மலைகளுக்குச் சென்றார்கள். அங்கு திருக்குர்ஆன் மொழியாக்கத்தை எழுத வைக்க ஆரம்பித்தார்கள். அது இறையருளால் ஆகஸ்ட் 25 1956 அன்று அஸ்ர் வேளைக்குள் முழுமை அடைந்துவிட்டது.

நக்லா என்ற ஒரு பகுதியில் அழகிய சூழல் நிறைந்த ஒரு சிறிய இடம் இருக்கிறது. இது கிளர்க்ஹாருக்கு அருகில் உள்ளது. அங்கு அன்னார் ஒரு சிற்றூரை அமைத்தார்கள். அங்கு அன்னார் இந்தப் பணியைச் செய்தார்கள். இதற்குப் பிறகு, அது மறுபார்வையிடப்பட்டது. பின்னர், மூன்றாவது முறை பார்வையிடப்பட்டது. அழகான முறையில் எழுதி முடிக்கப்பட்டது. Proof Reading செய்யப்பட்டது. அதற்கான பல பணிகள் நடந்தன. பின்னர், நவம்பர் 15, 1957 அன்று தஃப்ஸீரே ஸகீர் அச்சிட்டப்பட்டு முழுமையாக தயாராகி விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஃப்ஸீரே ஸகீர் பற்றி ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இதுவரை செய்யப்பட்டுள்ள திருக்குர்ஆன் மொழியாக்கங்களில் எந்த மொழியாக்கத்திலும் இதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ள அளவுக்கு உருது மற்றும் அரபு மொழி மரபு கருத்தில் கொள்ளப்படவில்லை என்பது எனது கருத்தாகும்.

பொதுவாக பாருங்கள்! குறிப்பாக அடிக்குறிப்புகளிலும் அன்னார் மொழியாக்கத்தில் மொழி மரபைக் கருத்தில் கொண்டுள்ளது தென்படும்.

இது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும். அவன் இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தகைய மாபெரும் பணியை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்கிவிட்டான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: அல்லாஹ் இந்த வயதான, பலவீனமான மனிதனை எப்படிப்பட்ட மகத்துவ மிக்க பணியை செய்ய வைத்து விட்டான் என்றால், பெரும் பெரும் ஆற்றல் மிக்கவர்களால் கூட அதை செய்ய முடியவில்லை.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

கடந்த 1300 ஆண்டு காலத்தில் பெரும் பெரும் ஆற்றல் மிக்க இளைஞர்கள் இருந்துள்ளனர். ஆனால், எந்தப் பணியை செய்வதற்கு அல்லாஹ் எனக்கு நற்பேறு வழங்கினானோ அதற்கான நற்பேறு அவர்களில் எவருக்கும் கிடைக்கவில்லை. உண்மையில், இது இறைவனின் பணியாகும். அவன் தான் நாடுபவர் மூலம் செய்ய வைக்கின்றான்.

அடுத்து, பிறிதோரிடத்தில் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் அருள் மற்றும் கருணையால் திருக்குர்ஆனின் முழு மொழியாக்கமும் முழுமை அடைந்துவிட்டது. அதாவது, அல்ஹம்துலில்லாஹ் முதல் வந்நாஸ் வரை சிறு விளக்கவுரையுடன் அதை தஃப்ஸீரே கபீர் உடன் ஒப்பிடும்போது தெரிய வருவதாவது, அதில் பல கருத்துகள் எப்படி ரத்தினச் சுருக்கமாக வந்துள்ளதென்றால் தஃப்ஸீரே கபீரில் கூட இல்லை.

பின்னர், ஆங்கில திருக்குர்ஆன் விரிவுரை பணி ஒன்றும் நடந்தது. அதை நாம் Five Volume commentary என்கிறோம். அந்த விளக்கவுரையின் தொடக்கத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் எழுது கோலால் எழுதப்பட்ட மிகவும் கருத்தாழம் மிக்க ஒரு முகவுரையும் இணைந்துள்ளது. அதில் பிற வேத நூல்கள் இருக்கையில் திருக்குர்ஆனின் தேவை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாறு, திருக்குர்ஆன் ஒன்று திரட்டியது மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள் ஆகியவற்றின் மீது முற்றிலும் தனித்துவமான மற்றும் மனதைக் கவரும் கோணத்தில் ஒளிபாய்ச்சப்பட்டுள்ளது.

திருக்குர்ஆனின் அந்த முகவுரையின் இறுதியில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் நன்றி தெரிவித்தல் மற்றும் அங்கீகரித்தல் என்ற தலைப்பின் கீழ் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

நான் இந்த முகவுரையின் இறுதியில் மவ்லவி ஷேர் அலீ ஸாஹிப் அவர்களின் உடல்நலம் குன்றியிருந்தபோதிலும் திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்காக அன்னார் மேற்கொண்ட அந்த நிகரற்ற தொண்டுகளை அங்கீகரிக்க விரும்புகின்றேன்.

இவ்வாறே மலிக் குலாம் ஃபரீத் ஸாஹிப் அவர்கள், மர்ஹூம் கான் பஹாதுரீ சவ்த்ரி அபுல் ஹாஷிம் கான் ஸாஹிப் அவர்கள் மற்றும் மிர்ஸா பஷீர் ஸாஹிப் அவர்கள் ஆகியோரும் நன்றி செலுத்தப்பட வேண்டியவர்கள்.

அன்னார் என்னுடைய பல்வேறு சொற்பொழிவுகள், நூல்கள் மற்றும் தர்ஸ்களிலிருந்து சுருக்கத்தை எடுத்து மொழியாக்கத்தில் விளக்கவுரைக் குறிப்புகளை எழுதியுள்ளார்கள்.

பின்னர், அதில் அன்னார் (ரலி) இதனையும் எழுதியுள்ளார்கள்:

நான் இதையும் கூற விரும்புகின்றேன். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மாணவனாக இருந்த காரணத்தால் எனது விளக்கவுரையில் பல கருத்துகள் நிச்சயம் அன்னாரிடம் இருந்து கற்றுக் கொண்டவையாக உள்ளன. எனவே, அந்த விரிவுரையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கவுரை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் விளக்கவுரை மற்றும் எனது விளக்கவுரையும் வந்து விடும்.

இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத் தனது ஆன்மாவால் மணம் கமழச் செய்து இந்தக் காலத்துக்குத் தேவையான அந்த அறிவுரைகளை அன்னாருக்கு வழங்கினான். எனவே, இந்த விளக்கவுரை பல நோயாளிகளை குணப்படுத்த காரணமாக அமையும்; பல (ஆன்மிகக்) குருடர்கள் இதன் மூலமாக கண்களைப் பெறுவார்கள்; செவிடர்கள் கேட்க ஆரம்பித்து விடுவார்கள். ஊமைகள் பேச ஆரம்பித்து விடுவார்கள். முடவர்கள் இயலாதவர்கள் நடக்க ஆரம்பித்து விடுவார்கள் என்று நம்புகிறேன்.

அல்லாஹ்வின் வானவர்கள் இதன் கருத்துகளுக்கு பரக்கத்தை வழங்குவார்கள். இது எந்த நோக்கத்திற்காக வெளியிடப்படுகிறதோ அந்த நோக்கத்தை இது நிறைவேற்றும். அல்லாஹும்ம ஆமீன். இப்போது வரை அதை யார் படித்தாலும், சில அந்நியர்களும் கிறித்தவர்களும்கூட அதிகம் புகழ்கிறார்கள். புகழ் பெற்ற எழுத்தாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் (நூல்கள்) இயற்றுபவராகவும் இருந்த, ஃபதஹ்பூரைச் சேர்ந்த அல்லாமா நியாஸ் என்பவர் நிகார் என்ற மாத இதழின் ஆசிரியராக இருந்தார். அவர் தஃப்ஸீரே கபீரைப் படித்தபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதினார். அவர் அஹ்மதி அல்ல. அவர் எழுதுகிறார்:

இன்றைய நாட்களில் என் முன் தஃப்ஸீரே கபீரின் மூன்றாவது தொகுதி இருக்கிறது. நான் அதனை மிக ஆழமான பார்வையுடன் பார்க்கின்றேன். முற்றிலும் ஒரு புதிய கோணத்தில் திருக்குர்ஆனைப் படிப்பதற்கான சிந்தனையை தாங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்பதில் ஐயமில்லை. இந்த விளக்கவுரை தனது வகையைப் பொருத்தவரை முற்றிலும் முதல் விளக்கவுரையாகும். இதில் அறிவையும் நூல்களின் சான்றையும் மிக அழகிய முறையில் ஒன்றுபடுத்தியுள்ளீர்கள். தங்களது அறிவியல் புலமையும், விசாலமான பார்வையும், தங்களது அசாதாரண சிந்தனையும் நுண்ணறிவும் தாங்கள் சான்றளிக்கும் அழகும் அதன் ஒவ்வொரு சொல்லிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதைப் பற்றி இதுவரை எனக்குத் தெரியாமல் போய்விட்டதே என்று நான் வருந்துகிறேன்.

விஷயத்தைக் கூறும் இந்த மனிதர் மிக அதிகமதிகமாக கற்றுத் தேர்ந்த அறிஞர் ஆவார். அவர் மேற்கொண்டு கூறுகிறார்:

நேற்று சூரா ஹூத் உடைய தஃப்ஸீரில், ஹஸ்ரத் லூத் (அலை) அவர்களைப் பற்றி தங்களது கருத்தைப் படித்து உள்ளம் பூரித்துவிட்டது. இந்தக் கடிதத்தை எழுதி ஆக வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகி விட்டேன். தாங்கள் هَٰؤُلَاءِ بَنَاتِي என்ற வசனத்தில் இதோ எனது பெண்கள் என்ற வரிக்கு விளக்கம் தரும்போது எல்லா விரிவுரையாளர்களை விட்டும் விலகி தாங்கள் மேற்கொண்ட அந்த விவாதக் கோணத்தைப் பாராட்டாமல் இருப்பது என்னால் இயலாது.

பின்னர் மற்றொரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

முறையாக, இரவில் அதைப் பார்க்கின்றேன். எனது பார்வையில் இது பெருமளவு மனித சிந்தனைக்கு நிறைவு அளிக்கக்கூடிய முற்றிலும் முதல் உருது விளக்கவுரையாகும். பிறகு கூறுகின்றார்கள்:

இந்த விளக்கவுரையின் மூலம் தாங்கள் இஸ்லாத்திற்கு ஆற்றியத் தொண்டு எந்த அளவு உயர்ந்தது என்றால், தங்களது எதிரிகளால் கூட அதை மறுக்க முடியாது. وَذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَنْ يَشَاءُ

ஹைதராபாத்தைச் சேர்ந்த சேட் முஹம்மது அஃஸம் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

அன்னார் அஹ்மதியாக இருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

இந்தியா பாகிஸ்தான் துணைக் கண்டத்தின் புகழ் பெற்ற பிரமுகர் நவாப் பஹாதுர்யார் ஜங்க் அவர்கள் - அவருடன் சேட் ஸாஹிபுக்கு நல்ல நட்பு ரீதியிலான தொடர்பு இருந்தது. இந்த பஹாதுர்யார் ஜங்க் ஸாஹிப் அஹ்மதியாக இருக்கவில்லை. அவருடன் அன்னாருக்கு நல்ல தொடர்பு இருந்தது. சேட் ஸாஹிப் கூறுகின்றார்கள்:

நவாப் பஹாதுர்யார் ஜங்க் தம்முடன் இருக்கையில் பெரும்பாலும் தஃப்ஸீரே சகீர் பற்றிக் கூறிவந்தார்கள். அதன் மகத்துவத்தை எப்போதும் பறைசாற்றி வந்தார்கள். அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அறிவாழங்களில் இருந்து தாம் பெரிதும் பயனடைந்ததாகக் கூறி வந்தார்கள்.

பின்னர், பாட்னா பல்கலைக்கழக உருது பிரிவின் தலைவரான ஜனாப் அக்தர் ரேன்வீ ஸாஹிப் எம் ஏ அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஒன்றன் பின் ஒன்றாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் தஃப்ஸீரே கபீரின் சில தொகுதிகளைப் பாட்னா பல்கலைக் கழகத்தின் ஃபார்ஸீ துறையின் முன்னாள் தலைவரான பேராசிரியர் அப்துல் மன்னான் பேதல் (பேதல் அல்லது பேதில் என்பது பெயராகும்) அவரிடம் கொடுத்தேன். பாட்னாவின் ஷபீனா கல்லூரியின் தற்போதைய தலைமை ஆசிரியரிடமும் கொடுத்தேன். அவர் அந்த விளக்கவுரைகளைப் படித்து விட்டு எவ்வளவு தாக்கத்திற்குள்ளானார் என்றால், அவர் அரபி மதரஸாவான ஷம்சுல் ஹுதாவின் ஷேக்குகளுக்கும் தஃப்ஸீரின் சில தொகுப்புகளைப் படிக்கக் கொடுத்தார். ஒருநாள் அவர் எல்லா ஷேக்குகளையும் அழைத்து அவர்களது கருத்தைக் கேட்டார்.

ஒரு ஷேக் கூறினார்: ஃபார்ஸீ தஃப்ஸீர்களில் இதுபோன்ற தஃப்ஸீர் இல்லை. பேராசிரியர் அப்துல் மன்னான் அவர்கள் அரபி தஃப்ஸீர்களைப் பற்றி என்ன அபிப்பிராயம் என்று கேட்டபோது, ஷேக்குகள் அமைதியாக இருந்தனர். சிறிது நேரம் கழித்து அவர்களில் ஒருவர் கூறினார்: பாட்னாவில் எல்லா அரபி தஃப்ஸீர்களும் கிடைப்பதில்லை. எகிப்து மற்றும் சிரியாவில் உள்ள அனைத்துத் தஃப்ஸீர்களையும் படித்த பிறகே கருத்து தெரிவிக்க முடியும்.

பேராசிரியர் அவர்கள் பழைய அரபி தஃப்ஸீர்களைக் குறிப்பிட்டார்கள். மேலும், கூறினார்கள்: மிர்ஸா மஹ்மூதின் தஃப்ஸீரில் காணப்படுகின்ற அளவு உயர்தரமான ஒரு தஃப்ஸீரும் (விளக்கவுரையும்) எந்த மொழியிலும் கிடைப்பதில்லை. நீங்கள் சிரியாவிலிருந்தும், எகிப்திலிருந்தும் புதிய தஃப்ஸீர்களையும் வரவழையுங்கள். சில மாதங்களுக்குப் பிறகு என்னிடம் பேசுங்கள். அங்கு அமர்ந்திருந்த அரபு மற்றும் ஃபார்ஸீ ஆலிம்கள் வாயடைத்து போனார்கள்.

பல்வேறு நூல்களை எழுதியவரும் லக்னோவின் சித்கே ஜதீத் பத்திரிகையின் தலைமை ஆசிரியருமான மவ்லானா அப்துல் மாஜித் தர்யாபாதி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது இவ்வாறு எழுதினார்:

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 23 March 2023 Issue No. 12

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கராச்சியில் இருந்து செய்தி வெளியாகியுள்ளது. காதியானி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் நவம்பர் 8 அன்று ரப்வாவில் மரணமடைந்துவிட்டார்கள்.

அன்னாரின் கொள்கை எப்படி இருப்பினும், திருக்குர்ஆன் மற்றும் திருக்குர்ஆனின் அறிவை உலகளாவிய முறையில் பரப்புதல், மூலை முடுக்குகளில் எல்லாம் இஸ்லாத்தைப் பரப்பும் தப்லீக் பணிகளில் தமது முயற்சிகளை அன்னார் ஈடுபாட்டுடனும் திட உறுதியுடனும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து வந்தார்கள். அவற்றிற்கான நற்கூலியை அல்லாஹ் அன்னாருக்கு வழங்குவானாக! மேலும், அன்னார் ஆற்றியத் தொண்டுகளுக்காக அன்னாருக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக. அறிவுரீதியாக திருக்குர்ஆனின் அறிவாழங்கள், இறைஞானங்கள் ஆகியவற்றிற்கு அன்னார் வழங்கிச் சென்ற தெளிவான விளக்கவுரை மற்றும் மொழியாக்கத்திற்கும் ஓர் உயர்ந்த தனிச் சிறப்பு மிக்க இடம் உள்ளது.

அடுத்து, மவ்லவி மஸ்ஹர் அலீ ஸாஹிப் அஸ்ஹர் எனும் ஒரு புகழ் பெற்ற அஹ்ராரீ தலைவர் இருந்தார். அவர் ஏக் கவ்ஃபானாக் ஸாஸிஷ் என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகிறார்:

மவ்லவி ஸஃபர் அலீ கான் கூறினார்: அஹ்மதிகளை எதிர்க்கிறோம் என்ற பெயரில் அஹ்ராரிகள் நன்றாகப் பைகளை நிரப்பிக் கொண்டார்கள். அஹ்ராரீகள் அஹ்மதிகளை எதிர்க்கின்றோம் என்று நன்றாகப் பணம் வசூலிப்பதற்காக, அதாவது பணம் சம்பாதிப்பதற்காக பாசாங்கு செய்து வருகிறார்கள். அவர் கூறுகிறார்:

காதியானிய்யத் எதிர்ப்பு என்பதைக் கேடயமாகப் பயன்படுத்தி ஏழை முஸ்லிம்கள் வியர்வை சிந்தி உழைத்து சம்பாதித்ததை இவர்கள் பறித்துக் கொள்கிறார்கள். யாராவது அந்த அஹ்ராரீகளைப் பார்த்து கேளுங்கள். நீங்கள் எல்லாம் முஸ்லிம்களை என்ன சீர்தூக்கி விட்டீர்கள்? இஸ்லாத்திற்கு நீங்கள் என்ன தொண்டாற்றி விட்டீர்கள்? நீங்கள் மறந்து கூட இஸ்லாத்தின் தப்லீகை செய்திருக்கின்றீர்களா?

இவரே ஓர் அஹ்ராரீ ஆவார். இவர் கூறுகிறார்:

அஹ்ராரீகளே! காதைத் திறந்து கேட்டுக் கொள்ளுங்கள். உங்களாலும் உங்களுடன் உள்ளவர்களாலும் கியாமத் வரை மிர்ஸா மஹ்மூதை எதிர்த்துப் போட்டிப் போட முடியாது. மிர்ஸா மஹ்மூதிடம் திருக்குர்ஆனின் ஞானம் இருக்கிறது. உங்களிடம் என்ன மண்ணா இருக்கிறது? உங்களில் யாராவது ஒருவரால் திருக்குர்ஆனின் சொல்லையாவது உச்சரிக்க முடியுமா? நீங்கள் கனவில் கூட ஒருபோதும் திருக்குர்ஆனை ஓதியதில்லை. உங்களுக்கே ஒன்றும் தெரியாது. நீங்கள் மக்களுக்கு என்ன எடுத்துச் சொல்வீர்கள்?

உங்களது வானவர்களால் கூட மிர்ஸா மஹ்மூதை எதிர்த்துப் போட்டியிட முடியாது. மிர்ஸா மஹ்மூதிடம் அவரது சைகையின்படி உடலாலும் உள்ளத்தாலும் செல்வத்தாலும் தியாகம் செய்வதற்கு ஆயத்தமான ஒரு ஜமாஅத் உள்ளது! உங்களிடம் என்ன இருக்கிறது? உங்களிடம் ஏச்சுப் பேச்சுகளும் தீய சொற்களைக் கூறுதலும் உள்ளது. உங்களது துரோகத்தால் வெட்கம் வருகிறது.

அடுத்து எழுதுகிறார்: மிர்ஸா மஹ்மூதிடம் கொள்கை பரப்புநர்கள் உள்ளனர். பல்வேறு கல்விகளில் திறமையாளர்கள் இருக்கின்றனர். உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் அவர் கொடியை நட்டு வைத்துள்ளார். என்னால் உண்மையைக் கூறாமல் இருக்க முடியாது. இதை நான் நிச்சயம் கூறுவேன். நீங்கள் மிர்ஸா மஹ்மூதை எதிர்க்க வேண்டும் என்றால், முதலில் திருக்குர்ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள். முபல்லிக்களைத் தயார் செய்யுங்கள். அரபி மதரஸாக்களை உருவாக்குங்கள். எதிர்க்க வேண்டும் என்றால், முதலில் முபல்லிக்கை தயார் செய்யுங்கள்.

அன்னாருக்கு நிகராக அந்நிய நாடுகளில் இஸ்லாத்தின் தப்லீக் செய்யுங்கள். (மக்களை) மிர்ஸாயீகளை (அஹ்மதிகளை) ஏச வைப்பதில் என்ன ஒழுக்கம் இருக்கிறது? இது தான் இஸ்லாத்தைப் பரப்புவதா? இது இஸ்லாத்தின் நிலத்தைப் பாழாக்குவதாகும்.

அடுத்து, லாஹூரின் அம்ரூஸ் பத்திரிகையின் மே 30, 1966 தேதி இதழில் தஃப்ஸீரே ஸகீரைப் பற்றி திறனாய்வு செய்தவாறு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

திருக்குர்ஆன் முழு மனித குலத்திற்கும் நேர்வழி மற்றும் வழிகாட்டலின் நீரூற்றாக தலையூற்றாக இருக்கிறது. உலகம் தோன்றிய காலத்திலிருந்து உலகம் இருக்கும் வரை இந்தத் தெள்ளத் தெளிவான மறை ,மார்க்க மற்றும் உலக விவகாரங்களில் மனிதர்களுக்கு நீதியின் பாதையைக் காண்பித்துக் கொண்டே இருக்கும். வழி தவறியவர்களை நேரான வழிக்கு அழைத்து வந்து கொண்டே இருக்கும்.

இன்றைய அறிஞர்களும் இதைப் புரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

திருக்குர்ஆன் ஒரு முழுமையான வாழ்வதாராமாகும். பத்திரிகை எழுதுகிறது:

திருக்குர்ஆன் ஒரு முழுமையான வாழ்வாதாரமாகும் திருக்குர்ஆனிலிருந்து நாம் விளக்கிக் கூற முடியாத எந்தத் துறையுமில்லை ; எந்த மூலையுமில்லை ; எந்த கட்டமுமில்லை. ஆனால், இதற்குத் திருக்குர்ஆனின் ஞானங்கள் நன்றாக அறிந்து கொள்வது அவசியமாகும் என்பது வெளிப்படை. திருக்குர்ஆனில் நல்லொழுக்கமாகக் கூறப்பட்டுள்ள இறை கட்டளைகளின் புரிதல்களுக்கான மனம் திறக்காத வரை நேர்வழி மற்றும் வழிகாட்டலுக்கான தொடர் எவ்வாறு ஆரம்பமாகும்?

இதைப் புரிவதும் அவசியமாகும். பிறகுதான் என்ன எழுதி இருக்கிறது ? என்பது தெரிய வரும். இந்த தேவையைக் கருத்தில் கொண்டு தான், திருக்குர்ஆனின் அர்த்தங்களின் விளக்கவுரைகள் மற்றும் விரிவுரைகளின் தொடர் ஆரம்பமானது. திருக்குர்ஆன் இறங்கியதிலிருந்து இப்பொழுது வரை மேலும், என்றென்றும் இந்தத் தொடர் தொடர்ந்து கொண்டே இருக்கும். திருக்குர்ஆனைப் புரிய வைப்பது தொடர்பாக ஏதாவது பங்களித்தவர்கள் நிச்சயமாக நன்றிக்குரியவர்கள். அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

திருக்குர்ஆனின் நுண்ணறிவுகளை பொதுவாக்குவதற்குத் தத்தமது காலகட்டத்தில் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் இந்த வகையிலும் போற்றத் தக்கவையாகக் கருதப்படும். இவ்வாறு திருக்குர்ஆன் விரிவுரை ஒரு முறையான திட்டத்தின் வடிவில் வந்து விட்டது. அர்த்தங்களை, பொருள்களை எட்ட வைக்கும் அத்தியாயத்தில் ஆராயும் ஓர் உறுதியான வழக்கம் நிலைபெற்று விட்டது. அல்ஹம்துலில்லாஹ். இது தொடர்கிறது. இனியும் தொடரும்.

(இதன் தொடர்ச்சி : அடுத்த இதழில்)

தமிழாக்கம் : மவ்லவி அதாவுல் முக்னீ

* * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad